புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு:

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம் | ரூ 5-00 |
| இங்கிலீசும் தமிழும் | 9-00 |
| இலங்கை இந்தியா | ரூ 8-00 |
| இங்கிலிசும் தமிழும் | 12-00 |
| தொலைவாய்பகுதி | ரூ 9-00 |
| இங்கிலிசும் தமிழும் | 13-00 |

முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

# இந்துசாதனம்.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

விளம்பரவிகிதம்.

முதன்முறைக்கு:

| | | |
|---|---|---|
| ,, ஒருசலம் | ரூபா | 10·00 |
| ,, அரைசலம் | ,, | 5·50 |
| ,, கால்சலம் | ,, | 4·00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதத்திற் பாதி.

☞ விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

"அவனத்தானு நல்லவை கேட்க அவனத்தானும், ஆன்ற பெருமை தரும்".

"சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச் செம்பூத்த வேமாக மங்கலோங்கப், பார்பூத்த புறச்சமய விருள்கனிவுப் பரம்பூத்த சைவநிலைபாரோர் தாங்கப்,
பேர்பூத்த சிவானந்த நினிது துங்கப் பிறைபூத்த சடைமலரிப் பிரானார் தந்த, வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றுன் வணங்கி வாழ்வாம்"

"வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல்லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே."

புத்தகம்—சஎ } யாழ்ப்பாணம்:— யுவ ஹு சித்திரைமீ" ககூஉ ( 1935 மே 2 வியாழக்கிழமை ) { இலக்கம்—எ



## கந்தரலங்காரம்.

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே.

இ—ள்: பங்கேருகன் – தாமரைப்பூவை ஆசனமாகக் கொண்ட பிரமதேவர்; எனைப் பட்டோலையில் இட - என்னைத் தமது கணக்கேட்டிற் பதிசற்ற; பண்டுதம் காலில் தளையிட்டது அறிந்திலனோ - முற்காலத்து (முருகப்பெருமான்) தமது காலில் விலங்கினை மாட்டுவித்ததை அறிந்திலரோ; பொங்கு ஓதம் வாய்விட - பொங்காநின்ற கடல் ஓலமிட; பொன்னம் சிலம்பு புலம்ப - அழகிய கிரௌஞ்சமலை கதற; தனிவேல் எடுத்துவரும் எம்கோன் அறியின் - ஒப்பற்ற வேற்படையைச் செலுத்திய எங்கள் தலைவராகிய சண்முகப்பெருமான் அறிய நேர்ந்தால்; நான்முகனுக்கு இனி இருவிலங்கே – நான்குமுகங்களையுடைய பிரமதேவருக்கு இனிமேல் இரண்டு விலங்கே (இடப்படும்) எ—று.

பிறவியெடுக்க வேண்டிய ஆன்மாக்களின் கணக்கிற் பிரமதேவர் இனிமேல் என்னைப் பதிந்து கொள்ளமாட்டார்; கொள்வரேல் அவருக்கு என் குருநாதனாகிய முருகமூர்த்தியால் தண்டனை கிடைக்கு மென்பதை அப் பிரமதேவர் அறிவர். பண்டுதளை தங்காலில் இட்டது, பிரமதேவர் பிரணவப் பொருளை அறியாது மயங்கிய விடத்துப் பாலசுப்பிரமணிய மூர்த்தி அவருக்கு விலங்கிட்டுச் சிறையில் வைப்பித்தமையைக் குறிக்கும். பொங்கோதம் வாய்விட வேலெடுத்தது உக்கிரகுமாராய்க் கடலை வற்ற வேல் விட்டதைக் குறிப்பதாம். இருவிலங்கென்பது கால்விலங்கன்றிக் கைவிலங்கும் இடப்படுமென அக் கருத்திற் சொல்லப்பட்டது. இது சுவாமியார் பிறவிக் கடலுட் புகார் என்பதை வலியுறுத்துவதாகும்.

பிரமதேவர் இன்னமும் என்னைப் பிறக்கச் செய்வாராயின் முருகக் கடவுள் அவரைத் தண்டிப்பரென்றபடி.

அகூ.)

### தேயிலைப்பானம்.

லண்டனில் உள்ள இலங்கைச் சங்கம், தேயிலை சம்பந்தமான ஓர் அறிக்கையை இப்போது வெளியிட்டிருக்கிறது. அதில் இன்ன இன்ன தேசத்தில் எவ்வளவு எவ்வளவு தேயிலை உபயோகமாகின்றது எனும் விபரம் குறிக்கப் பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவிலேயே தேயிலை அதிகமாக அபிமானிக்கப் படுகின்றது என்றும், அங்குள்ள ஒருவன் ஓர் ஆண்டில் சராசரி 9·52 இறாத்தல் தேயிலையை உபயோகிக்கிறான் என்றும் மேற்படி அறிக்கையில் இருந்து தெரிகிறது. ஏனைய தேசங்களில் ஒவ்வோர் மனிதனும் உபயோகிக்கும் சராசரித் தேயிலை விபரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ஆஸ்திரேலியா:— | 9.52 | இறாத்தல் |
| இங்கிலாந்து:— | 9.47 | ,, |
| நியூஸிலந்து:— | 8.22 | ,, |
| ஐரிஷ்சுவாதீனநாடு:— | 7.91 | ,, |
| நியூபவுண்லாந்து:— | 5.51 | ,, |
| கனடா:— | 3.74 | ,, |
| மொராக்கோ:— | 3.69 | ,, |
| ஒல்லாந்து:— | 2.82 | ,, |
| தென் ஆபிரிக்கா:— | 1.50 | ,, |
| ரியூனிஸ்:— | 1.37 | ,, |

### ஜெர்மனியும் வெர்சையில்ஸ் உடன்படிக்கையும்

இன்று (வியாழன்) அந்நிய நாட்டு விவகார சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் விவாதம் நடக்கும். ஜெர்மனி வெர்சையில்ஸ் உடன்படிக்கையை மீண்டும் மீறி நீர்மூழ்கிக் கப்பல்கள் கட்டுவதற்கு முயற்சி செய்வது சம்பந்தமாகவே அதிகம் விவாதிக்கப்படும்.

### தேசாதிபதிக்கு மநு

——:§:——

நெல்மீதுள்ள வரியைத் தவிர்க்க வேண்டும்.

——

கரவெட்டியிற் கண்டனக்கூட்டம்,

——

சட்டைவேலிக் கோவிற்பற்றைச்சேர்ந்தவர்களின் மகாகூட்டமொன்று சென்ற வாரம் நெல்லியடி முருகமூர்த்தி ஆலயத்தில், ஸ்ரீ. C வைத்தியலிங்கம் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. நெல்லின்மீது தற்போதுள்ள வரியை 100 விகிதம் உயர்த்தவேண்டும் என அரசாங்கசபையினர் செய்த தீர்மானத்தைக் கண்டிப்பதற்காகவே மேற்படி கூட்டம் கூட்டப்பெற்றது. தலைவர், ஸ்ரீ. A. சிற்றம்பலம், முதலியோர் கூட்டம் கூடப்பட்டதன் நோக்கத்தை விளக்கியபின் பின்வரும் நிர்ணயம் சர்வாங்கீகாரமாய் நிறைவேறியது:—

"அரசாங்கசபை நெல்மீதுள்ள வரியை உயர்த்தவேண்டும் என்று செய்த நிர்ணயத்தை இம் மகாகூட்டம் கண்டிக்கிறது. இந்த அடாத நிர்ணயத்தைத் தேசாதிபதியவர்கள் தமது அதிகாரத்தைக்கொண்டு நிராகரித்தல் வேண்டும் எனவும் இம்மகா கூட்டம் எமது அதி உத்தம தேசாதிபதியவர்களை வேண்டிக் கொள்ளுகிறது"

இந்நிர்ணயத்தைப்பற்றி அதி உத்தம தேசாதிபதி, வடமாகாணத்தலைவர், பிரதமகாரியதரிசி, அரசாங்கசபையில் பருத்தித்துறைப்பகுதிப் பிரதிநிதி ஸ்ரீ G. G பொன்னம்பலம் என்பவர்களுக்கு அறிவித்தல் வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## 6 மாதத்தில் 60 லட்சம் ரூபா மிச்சம்.

——)o(——

அரசினர் வரவுசெலவுக்கணக்கு விபரம்.

——

வர்த்தக அபிவிருத்தியால் அதிக வருமானம்.

——

1934-ம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் 1935-ம் ஆண்டு மார்ச் மாதம் வரை முடிந்த அரை ஆண்டிலும், இலங்கை அரசினர்க்கு செலவுக்கு மிஞ்சிய வரவாக 6,085,691 ரூபா கிடைத்திருக்கிறது என அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது.

பின்வரும் காரணங்களினாலேயே இந்த 60லட்சம் ரூபா மிச்சமாயிற்று என்று தெரிகிறது.

(1) வர்த்தக அபிவிருத்தி. இது ரேகுப் பகுதியாற் கிடைத்திருக்கும் அதிக வருமானத்திலிருந்து தெரிகிறது.

(2) வருமானவரியின் அதிகபாகம், இவ்வாண்டின் முற்பகுதியிலேயே அறவிடப்பட்டமை.

(3) மதுபரிபாலனப் பகுதியின் வருமானம் அதிகப்பட்டமை.

ரேகுப்பகுதியால் மாத்திரம், அரசினர்க்குக் குறித்த 6 மாத காலத்திலும் 25,717,663 ரூபா வருமானமாகக் கிடைத்திருக்கிறது.

### ஜப்பானியரின் எதிர் முயற்சி.

தனது வர்த்தகத்திற்கு முட்டுக்கட்டையிடும் நாடுகளின் வர்த்தகத்திற்குத் தானும் முட்டுக்கட்டையிட ஜப்பான் முனைந்திருக்கிறது. சென்ற 27-4-35இல் ஜப்பான் தலைநகராகும் டோக்கியோவில் பல்வேறு மந்திரிகளின் சபை ஒன்று கூட்டப்பட்டது. தமது பொருள்கள் இறக்குமதியாவதைக் கட்டுப்படுத்தும் தேசப்பொருள்களை ஜப்பானில் இறக்குமதியாவதைத் தடுக்க இம் மந்திரிகள் கூட்டம் ஆலோசித்திருக்கிறது.

### ஸ்ரீஜுத் சுபாஷ் சந்திரபோஸ்

வியன்னாவில் சித்திசாமாக ஸ்ரீஜுத் சுபாஷ் சந்திரபோஸ் அவர்களுக்கு ரணசிகிச்சை செய்த பிரபல டக்ரரான டெமெல் ஸ்டொபாஷ் என்பவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:—"ஸ்ரீஜுத் போஸ் அவர்களின் தேக நிலைமை திருப்திகரமாயிருக்கிறது. நாடி ஓட்டம் வழக்கம்போலவிருக்கிறது"

### பிரிட்டிஷ் துப்பறியும் பகுதித் தலைவர்

வங்க மாகாணத்துத் சோதிபதியான சேர் ஜேன் அன்டர்ஸன் அவர்கள் இங்கிலாந்தில் உள்ள 'ஸ்காத்லாந்து யாட்" என்னும் பிரபல்ய துப்பறியும் பகுதிக்குத் தலைவராக நியமிக்கப்படலாம் என்று லண்டன் "நியூஸ் கிறுணிக்கிள்" பத்திரிகை கூறுகிறது

### பஸ் சாரதிக்கு 100 ரூபா அபராதம்.

யாழ்ப்பாணத்திலிருந்து நீர்வேலிக்குச் சென்ற K 562-ம் இலக்கம்கொண்ட மோட்டர் பஸ்வண்டியைச் சாவதானமின்றியும் மிக்க வேகமாகவும் செலுத்தினான் என்று மேற்படி பஸ் சாரதியான அபூபக்கர் கரீம் என்பவன் சென்ற செவ்வாய்க்கிழமை யன்று யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டு, குற்றவாளியாகக் கண்டு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டான்.

## அல்வாயில்நிகழ்ந்த அக்கிரமம்.

—:o:—

ஐவருக்குமாறாக வழக்கு.

——

நாற்பதுசாட்சிகள்.

——

வல்வெட்டி சந்திரப்பிள்ளை வல்லிபுரம் புலோலி கிழக்கு மயில்வாகனம் துரையப்பா, செம்பிளாம்பத்தை கந்தன் நாகன், அல்வாய்மேற்கு சின்னையர் சிதம்பரப்பிள்ளை என்னும் நால்வருடன் இன்னொருவரும் சேர்ந்து அல்வாய் கணபதிப்பிள்ளை கைம்பெண் சிதம்பரம் என்னும் மூதாட்டியைக் கொலைசெய்தனரென்றும் சட்டவிரோதமாக அன்னவரின் வீட்டிற்குள் நுழைந்து நகைகளைக் களவாடினர் என்றும் சென்ற திங்கட்கிழமை பருத்தித்துறைப்பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

அட்சரக் கூட்டுடன்சேர்ந்த சங்கிலியொன்று, கடுக்கன் ஒருசோடி, பதக்கங்கள் இரண்டு, தோடுசோடி ஒன்று என்னுமிவை களவு பொருட்கள் எனத் தெரிந்தும் அவற்றை வாங்கினர் என்னும் இன்னோர் குற்றம் எதிரிமீது பாரிக்கப்பட்டிருக்கிறது.

அரைத் தங்கப்பவுனுக்குமேல் நிறையுள்ள ஓர் மோதிரத்தை அது களவுப் பொருளெனத் தெரிந்தும் வாங்கினர் என 2ம் எதிரி துரையப்பா மீதும், 3ம் எதிரி நாகன் மீதும் இன்னோர் குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.

சென்ற மார்ச்மாதம் 7ந் தேதி யிரவு கொலைசெய்யப்பட்ட மனுஷியின் வீட்டிற்குச் சமீபமாக 1ம் 2ம் 3ம் எதிரிகள் நடந்து சென்றார்கள் என்று N. கணபதிப்பிள்ளை, V. ஐயாத்துரை, K. மயில்வாகனம் என்னும் 3 சாட்சிகள் கூறினர்.

கொலை நிகழ்ந்த 10 நாட்களுக்குப் பின் 1ம் எதிரி சில நகைகளை இரு முஸ்லிம்களுக்கு விற்கத் தான் ஏற்பாடு செய்ததாக S வைரவன் என்பவன் சாட்சியம் கூறினான்.

சுல்தான் அப்துல்காதர், மகமது மொகிதீன் என்னுமிரு முஸ்லீம்கள் சில நகைகளைத்தாம் 1ம் எதிரியிட மிருந்து வாங்கினதாகவும் அவற்றைத்தாம் மீராசாய்பு என்பவருக்குத் திருப்பி விட்டதாகவும் கூறினார்கள். மேற்படி நகைகளுடன் சேர்ந்த தோடுகள் கோட்டில் ஒப்புவிக்கப்பட்டன. அவை இறந்த மூதாட்டிக்குச் சொந்தமானவையேயென்று அன்னப்பிள்ளை என்னும் மனுஷன் கோட்டிற் கூறினான்.

நீதிபதி எதிரிகளை விளக்கமறியலில் வைப்பித்து வழக்கைத் தவணையிட்டிருக்கிறார். இவ்வழக்கில் 40 சாட்சிகள் உளர்.

### விமானங்கள் ஒன்றோடொன்று மோதியமை.

சென்ற 28-4-35 அன்று கல்கத்தாவுக்கு மேலாகப்பறந்து சென்ற இரு ஆகாயவிமானங்கள் ஒன்றோடொன்று மோதியமையினால், இருமானங்களின் சாரதிகளும் இருபிரயாணிகளும் மாண்டனர். விமானங்களும் மேல்வீழ்ந்து சுக்கல்சுக்கலாக நொருங்கின.

## விசேஷ விஞ்ஞாபனம்

நமது அரச சக்கரவர்த்தியின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் வருகிற திங்கட்கிழமை (6–5–35) நிகழ்வதால் அத்தினத்துச் சைவப் பிரகாச யந்திரசாலையிலும் இந்துசாதனாலயத்திலும் எவ்வகையான கருமங்களும் நடவா. இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களும் அத்தினத்து வெளிவருதலின்றி, அடுத்த வியாழக்கிழமையே (9-5-35) வழக்கம்போல் வெளிவரும்.

மனேஜர்.


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்: யுவ௵
சித்திரை௴ ௧௯ வியாழக்கிழமை.


## அரசசக்கரவர்த்தியின் வெள்ளி விழா.

இங்கிலாந்திற்கும் இலங்கை முதலிய நாடுகளுக்கும் அரசரும் இந்திய தேசத்தின் சக்கரவர்த்தியுமாகிய நமது ஜோர்ஜ் மன்னர் சிம்மாசனமேறி இருபத்தைந்து வருடங்கள் பூர்த்தியாகின்றனவாதலின் அதற்குரிய வெள்ளிவிழா என்னும் கொண்டாட்டம் வருகிற திங்கட்கிழமை (6–5–35) ஆதவன் எந்தநேரமும் நின்றிலவும் ஆங்கில ராச்சியம் முழுவதிலும் கொண்டாடப்படும். இந்தக் கொண்டாட்டத்திற்குரிய முயற்சிகளும் ஆயத்தங்களும் இங்கிலாந்திலே ஒரு வருட காலமாகச் செய்யப்படலாயின எனக் கூறுதல் மிகையாகாது.

நீடித்தகாலமாக இராச்சிய பரிபாலனஞ் செய்த விக்ரோறியாச் சக்கிரவர்த்தினி காலத்தில் அச்சீமாட்டி பொருட்டு வெள்ளிவிழா மாத்திரமல்ல, பொன்விழா, இரத்தினவிழா என்னுமிவைகள் கொண்டாடப்பட்டன. அதன்பின்னர் ஏழாவது எட்வேர்ட் மன்னரின் இராச்சிய பரிபாலனகாலம் சிலவருடங்களேயாதலின், அவர் காலத்தில் வெள்ளிவிழாதானும் நடைபெறவில்லை. இப்பொழுது நமது அரசசக்கரவர்த்தி இவ் வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தைப் பார்த்து மகிழத்தக்க நீடிய ஆயுளையும் அரோகதிடகாத்திரத்தையும் இறைவன் அவர்க்கு அருளியிருத்தல் அவருடைய பிரசைகளாகிய பல கோடி சனங்களுக்கு ஆநந்தத்தை விளைக்கும்.

இங்கிலாந்து அரசருக்குரிய அதிகாரம் காலகதியிலே அருகியருகிவருகின்றதென்பது நிசம். ஆனால் உலகத்திலேயுள்ள தத்துவராச்சியங்கள் பலவற்றில் அரசனை இன்றேல் சக்கரவர்த்தியைத் தலைமையாகக்கொண்டு இராச்சிய பரிபாலனஞ்செய்யும்முறை தவிர்க்கப்பட்டு, பிரசாதிபத்தியமுறை அதிகப்பட்டுள்ள இக்காலத்தில், நமது இங்கிலாந்து இராசரிகமுறையையே கைக்கொண்டிருப்பதும் அரசசக்கரவர்த்திக்கு இப்பொழுது வெள்ளிவிழா நடப்பதும் அற்புதமென்றே சொல்லவேண்டும்.

அரசசக்கரவர்த்தியின் வெள்ளிவிழா இந்தியா இலங்கையென்னும் நாடுகளிலும் விசேஷமாகக் கொண்டாடப்படுமல்லவா. இந்தியா இலங்கையாகிய இந்நாடுகளில் ஆங்கில அதிகாரிகளின் பரிபாலனமுறையில் வெறுப்பு ஏற்பட்டிருப்பினும், அரசசக்கரவர்த்தியிடத்து இந்நாடுகளில் உள்ள சனங்களின் விசுவாசம் எள்ளளவேனுங் குறையவில்லையெனலாம். இந்து மக்களினிலோ "அனைவர்க்குந் தெய்வம் - இனிமுகப்பைம் பூணிறை" என்றபடி அரசனைத் தெய்வமாகவும், ஐங்குரவருள் ஒருவராகவும் மதித்து வருகின்றனர். இராசதந்திரிகளும் கீழதிகாரிகளுஞ்செய்யும் பிழைகள்பொருட்டு நாம் நமது அரசசக்கரவர்த்தியைக் குறைகூறுதல் "எய்தவனிருக்க அம்பை நோவதுபோ"லன்றேயிருக்கும். ஆதலால் நாம் அக்குறைகளைப் பொருட்படுத்தாது எங்கள் அரசரென்ற மதிப்புடன் குறித்த கொண்டாட்டத்தை மனப்பூர்வமாகக் கொண்டாடுதல்வேண்டும். மேலும் கொண்டாட்ட காலத்திலே மேலைத்தேசத்தார் செய்யும் சிலவற்றை மதுபானம் முதலிய இவைகளை நாங்கள் பின்பற்றுதுஅறவே நீத்து நமது சக்கரவர்த்திக்கு அரோகதிடகாத்திரமும் நீடிய ஆயுளும் பெருகவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்து அன்னதானம் முதலிய சற்கருமங்களைச்செய்து, "மன்னன்கோன்முறை அரசுசெய்க" என வாழ்த்துவோமாக.

---

## யாழ்ப்பாணத்திற் புகையிலை வியாபார எதிரிடை.

யாழ்ப்பாணம்—மலையாளப் புகையிலை வியாபார விஷயத்தில் இங்குள்ள புகையிலை வியாபார ஐக்கிய சங்கத்தாருக்கும் ஏனைய புகையிலை வியாபாரிமாருக்கு மிடையே வியாபார எதிரிடையும் பிணக்கும் ஏற்பட்டிருந்தன. குறித்த ஐக்கிய சங்கத்தாரின் புகையிலையைத் திருவிதாங்கூரில் விற்றற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கனர். அச்சங்கத்தின் தலைவராகிய பிறக்ரர் T. C இராசரத்தினமவர்கள் யாழ்ப்பாண—மலையாளப் புகையிலை வியாபாரமுறைகளை நன்கு ஆராய்ந்தனர். ஐக்கிய நணய சங்க உதவிப் பதிவுக் காரியஸ்தராகிய ஸ்ரீ C. இரகுநாதனவர்கள் இந்த வியாபார விஷயமாக மலையாளஞ் சென்று அங்கு அறியவேண்டிய விஷயங்களை அறிந்து செய்யவேண்டிய ஒழுங்குகளையுஞ் செய்து கொண்டு சில தினங்கட்கு முன்னர் யாழ்ப்பாணம் மீண்டுள்ளார். இப்படிச் செய்யப்பட்ட ஒழுங்குகளிற் பிரதானமானவை:—

(1) மலையாளத்திற் புகையிலையின் விலை என்ன என்பதையும், கொல்லம் ஆலப்பள்ளி என்னும் இடங்களில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாணப்புகையிலை எவ்வளவென்பதையும் பட்சத்திற்கொருமுறை — அதாவது பதினைந்து நாட்களுக்கொருமுறை, பத்திர வாயிலாக வெளியிடல் வேண்டும்.

(2) குறித்த ஐக்கிய சங்கத்தின் பிரதிநிதிகள் மூலமாக திருவிதாங்கூரில் யாழ்ப்பாணப் புகையிலை விற்பதற்கெனக் கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.

(3) சங்கத்திற் கட்டுப்படாத புகையிலை வியாபாரிமார் செய்யும் மேற்படி வியாபாரத்தைத் தடுத்தற்கான முயற்சி செய்தல்.

(4) சிங்கப்பூர், மலாயா, ஜாவா, சுமாத்திரா முதலாம் நாடுகளிலும் யாழ்ப்பாணப் புகையிலையை விற்றற்கான முயற்சிகளைச் செய்தல்.

இச்சங்கத்தார் யாழ்ப்பாணப் புகையிலையின் இறக்குமதித் தீர்வையைக் குறைப்பதற்கான முயற்சிகளையுஞ் செய்கின்றனர். இந்த விஷயத்தில் இலங்கை விவசாய மந்திரியை மலையாள அதிகாரிகளோடு பேசி ஒழுங்கு செய்யும்படி இச் சங்கத்தினர் தூண்டுகின்றனர். திருவிதாங்கூரில் ஏனைய நாட்டுப் புகையிலைகள் வந்து சேர்ந்தாலும் யாழ்ப்பாணத்தின் புகையிலைக்கே மதிப்பு உண்டு என்று சொல்லப்படுகிறது.

இச்சங்கத்தோடு சேருதலின்றி எதிரிடை பாராட்டும் வியாபாரிமாருள் மூவர் பிரதானமானவர்களாம். அவர்களுள் ஒருவர் இலங்கைப் பழைய சட்ட நிரூபண சபையின் சனப் பிரதிநிதியாகவிருந்தவர். 1934 ம் ஆண்டில் இந்த ஐக்கிய சங்கம் ஆரம்பமானபோது குறித்த 3 வியாபாரிமாரும் யாழ்ப்பாணம் வந்து புகையிலை செய்வோரை வஞ்சிக்கவும் இச் சங்கத்தைக் குழப்பவும் முயன்றனராம். ஆனால் இவர்கள் தங்கள் நோக்கம் பலியாமை கண்டு மீண்டு திருவிதாங்கூருக்குப்போய் இச் சங்க மூலமாக அனுப்பப்படும் புகையிலையைத் தாங்கள் வாங்குவதில்லை என்றும் அப்படிக் கட்டுப்பாட்டை மீறி வாங்கினால் 10000 ரூபா அபராதங் கொடுத்தல் வேண்டுமென்றுங் கட்டுப்பாடு செய்தனர். அதன்பின் யாழ்ப்பாணத்திற்கு மீண்டு வந்து 1933 ம் ஆண்டு விளைவில் 2100 கண்டி புகையிலையும் 34 ம் ஆண்டு விளைவில் 727 கண்டி புகையிலையுமாக வாங்கி மலையாளத்திற்கு ஏற்றுமதி செய்தனர். ஐக்கியசங்கத்தார் 400 கண்டி புகையிலையை அவ்வருடத்தில் ஏற்றுமதி செய்தனர். ஆனால் 34 ம் ஆண்டில் ஐக்கிய சங்கத்தார் 800 கண்டி புகையிலையை ஏற்றுமதி செய்தனர். எனினும் இவ் ஐக்கிய சங்கம் இப்பொழுது கூடிய தொகையான புகையிலையை இங்கு வாங்கி அங்கு அனுப்புவதற்கான நிலைமையில் இருக்கின்றது; இச் சங்கத்தாரின் நோக்கத்தை வலுக்கப்படுத்திற் புகையிலை வியாபாரம் உச்ச நிலைமையை அடையுமென்பது திண்ணம்.

## உலகம் பலவிதம்.

—):×:(—

யாழ்ப்பாணப் பகுதியிற் பல இடங்கட்குப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்களுக்கும் சாமான் ஏற்றிச் செல்லும் லொறிகளுக்குமிடையே அதிக பேதமில்லைக் காணோம். ஒரே பஸ்ஸிலேயே அரிசி மூடையையும் விறகையும் மனிதனையும் ஏற்றிக்கொண்டு போகிறார்கள்; இவ்வளவோடு மாத்திரம் இருந்துவிட்டாற் போகாதா? எத்தனையோ பஸ்களின் மேற்புறத்தே மீன்பறி கறிக்கடகம் வண்ணானுடைய அழுக்குத்துணிப் பொதி இவ்வளவும் ஏற்றப்பட்டபின் மீன்பறிகாரன், கறிக்காறி, கட்டாடி, ஐயர், "சைவம்" எனையோ எல்லாரையும் ஒருங்கு பஸ்ஸினுள் ஏற்றி விடுகிறார்கள்; இவ்வாறு ஏற்றப்பட்டபடி பஸ் வேகமாகப் போகும்போது, கள்ளுத் தவறணைகள் வழியிற் காணப்பட, அவர்களிற் சிலர் நடுத்தெருவில் தள்ளாடியபடி வந்து கொண்டு "ஏ, மறிபடா, பஸ்ஸை" என்று செல்லவிடாது தடுத்துக் குறுக்கே நிற்கிறார்கள். "கண்டக்ரர்" பயம் முதலிய பல காரணங்களினால் அக்குடிகாரரையும் பஸ்ஸில் ஏற்றித்தான் தீரவேண்டியவராயிருக்கிறார். இவர்களும் ஏறிக்கொள்ள பஸ்ஸிலும் பூரணபாரமாய் விட, ஏனைய பிரயாணிகளுக்கும் நேரக்கூடிய வசதியீனங்கள் எல்லாம் வந்து சேருகின்றன. இதற்கிடையில் பெரிய கடையிலிருந்து பஸ்ஸிலேறிய பிரயாணிகளுட் சிலர் அங்கு வாங்கிய மீன் உமல், அஞ்சு மூற்சந்தியில் வாங்கிய இறைச்சிப் "பார்ஸல்" இடையில் எங்கேனும் வாங்கிய கருவாட்டுப்பொதி இவைகளையெல்லாம் தாம் தாம் இருக்கும் ஆசனத்தின்கீழ் மெல்லக் கொண்டுவந்து வைத்துவிட்டே ஏறிக்கொள்ளுவர்.

* * *

இக் காரணங்களினாலே பலவகையான துர்நாற்றம் அந்த பஸ்ஸில் மாறிமாறி வீசிக்கொண்டே இருக்கும். ஒரு சமையத்தில் கறிக்கடையில் நாறுவதுபோல நாறும்; இன்னொரு சமையத்தில் இறைச்சிக் கடையின் செடில் மணக்கும்; அதில் இருக்கும் பிரயாணிகளுட் சிலர் பெரிய கடையிலுள்ள சாராயத் தவறணைக்குப் போய் வந்தேறியவர்களாதலால், வேறொரு சமையத்தில் சாராயத் தவறணைக்கு அணித்தாகப் போகும்போது எழும மணம் போன்ற மணம் எழும். கள்ளுத் தவறணையிலிருந்து வந்தோர் இடைவழியில் வந்து ஏறியிருத்தலாற் பிறிதொரு சமையத்திற் கள்ளுத் தவறணையில் ஏற்படும் துர்வாசனை கமழும். அங்குள்ளோருட் பலர் இப்பலவகையான மணத்தையும் நீக்க எண்ணிச் சுருட்டுப் புகைப்பதினாலே, புகையிலையை உலர்த்தும் புகைக் குடிலில் உண்டாகும் கந்தம் அங்கே பரிமளிக்கும். பஸ்ஸிற் பலர் இடையீடின்றி நெருங்கி இருப்பதனாலும் காற்றுக் குறைவாய் இருப்பதனாலும் வெய்யில் அதிகமானதினாலும் வியர்வை உண்டாக, கற்றாளை நாற்றம் இன்னொரு சமையத்தில் உலவும். மீன்பறி கறிக்கடகம் அழுக்குத்துணிப் பொதி இவைகளெல்லாம் ஒருங்கு சேர்ந்து மற்றொரு சமையத்திற், பெரும்பாலும் பஸ் தரிக்கும்போது, முடை நாற்றமாக நாறும். இனி, அந்த பஸ்ஸிலுள்ளோர்கள் செய்யுஞ் செயல்களும் பேசும் பாஷையும் ஒரு வசிசில் ஏககாலத்திற் பல செயல்களும் பல பேச்சுக்களும் நடக்கும் இயல்பினை ஒத்திருக்கும். ஒருவர் தாம் வெற்றியடைந்த வழக்கைப்பற்றிப் பேசிப் புகழுவார். இனனொருவர் தமது கிராமத்திலே முதனாளிலே, சில நாட்களுக்கு முந்தியோ நடந்த அடிபிடியைப் பற்றிப் பேசி அவரே தீர்ப்புஞ் சொல்லி விடுவார். வேறொருவர் சங்கானைக் கிராமச் சங்கத் தெரிவில் நடந்த புதினங்களைப் பற்றிக் கூறுவார். இவை மாத்திரமல்லாமல், பெண்களைவெடுத்த வழக்கு, ஆள்மாறித் தாலிகட்டிய விபசரிசயம், அடுத்தமுறை அரசாங்கசபைத் தேர்தல், பெண்கள் மேளம், பேசும்படக்காட்சி மகத்துவம், நெல்லுக்கு வரியேற்றியமை, இன்னமும் கள்ளுக்கடை சாராயத்தவறணைகள் திறக்கவேண்டிய ஊர்கள், தேங்காய் கொப்பறாவிலையேறிய புதினம், அராலி அம்மன் கோவில் காட்டு வைரவர் கோயில்களில் ஆடுகோழி வெட்டுந்திருநாள், அரசசக்கரவர்த்தியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் முதலிய அநேக விஷயங்கள் அற்ப நேரத்தில் அந்த பஸ்ஸிலேயுள்ள சபையோருக்குப் பரஸ்பரம் பிரசங்கிக்கப்படும்.

* * *

இவை மாத்திரமா? இல்லை; இல்லை; இன்னும் விசேஷமான வாக்குஞ் செயலும் பல அவதானிக்கத் தக்கனவாம். அந்தப் பஸ்ஸில் ஏறியிருக்கும் மதுபானிகட்கு வெறியேறிவிட அவர்களுள் ஒருவர் பாடுவர்; மற்றவர் தாளம் போடுவர்; இன்னுமொருவர் கேட்டு ஆநந்தித்துச் சிரக்கம்பனஞ் செய்வர். வேறொருவர் வாய் துப்பியூத்தி நித்திரை தூங்கி அயலிலிருப்பவருடைய மடியில்விழ, அவர் இவரைச் சினந்து "எட, நீயுங் குடித்தாய், நானுங் குடித்தது மெய்; குடித்தால் இப்படியெல்லாம் நடக்க வேண்டுமோ" என்று அதட்டுவர். பிறிதொருவர் உடுத்திருக்கும் வஸ்திரம் நழுவ வேறொருவர் அதனை உடுத்தி விடுவர். பஸ் வேகமாக ஓடும் போது ஒருவர் கள்ளுமயக்கத்தினால் "ஏனடா, பஸ்ஸை நிற்பாட்டினாய்" என்று சாரதியைக் கோபிப்பர். இதற்கிடையில் "கண்டக்ரர்" இவர்களிடத்திற் பணம் வாங்குவதற்குப் படுங் கஷ்டமோ பார்க்கப் பரிதாபமானது.

* * *

இவைபோக இன்னுஞ் சில விநோதங்களை இங்குள்ள பஸ்களிற் காணலாம். கட்டாடி வந்து பஸ்ஸில் ஏறினால் "கட்டாடி மூட்டையை எடுத்துவிட்டு, வெறும் பலகையில் இரு" என்பார் 'கண்டக்ரர்' கட்டாடி அப்படிச் செய்கிறான். கறிக்காறிகளை ஒருபுறமாக இருக்கச் சொல்லுகிறார். பாமேறிகளை 'வக்கு'க்குள் இருக்கக் கட்டளை இடுகிறார். ஆனால் சாதியிலே தக்க வேளாளனென்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் இந்தக் கண்டக்ரர் தான் பஸ்ஸின் மேற்புறத்தில் ஏறிநின்று கொண்டு, கட்டாடி கொடுக்கும் அழுக்குத் துணிப் பொதியையும், கறிக்காறி நீட்டும் கறிக்கடகத்தையும், பரதவர் நீட்டும் மீன் பறியையும் தனது இரு கரங்களாலும் ஏற்று மேலே ஏற்றுபவர். இராவணனுக்குப்போல இவருக்கு இருபது கரங்களிருக்குமேல் அவர் அந்த இருபது கரங்களினாலும் அப் பொதி கடகம் பறி என்னும் இவைகளை வாங்கி ஏற்றியிருப்பார். பஸ் வைத்து ஓடுவோர் செய்யும் இப்படியான அநாசாரச் செய்கைகள் காரணமாக, மரியாதைக்கு உடன்பட்டோர் பலரும் பெண்களும் இந்நாட்களில் பஸ்ஸிலேறப் பின்னிற்கின்றனர். புகைரதத்தில் இப்படியான செயல்கள் நடத்தல் அரிது ஆதலாற்றான் அநேகர் புகைரதப் பிரயாணமே வசதியென்று இப்பொழுது எண்ணங்கொண்டு அதனை அபிமானிக்கத் தொடங்குகின்றனர்.

---

## குடிவெறியினால் சிறை.

நல்லூர் வாசியான V. தம்பிப்பிள்ளை என்பவர் நேற்றுப்பின்னேரம் குடிவெறியினால் பகிரங்க வீதியில் நின்று தொந்தரவு விளைத்தார் என்னும் குற்றத்தின் பேரில் பொலிசாரால் சிறையாக்கி 50 ரூபாப் பிணையில் போகுமாறு உத்தரவிடப்பட்டார். வழக்குத் தவணையிடப் பட்டிருக்கிறது. பிணையெடுப்பார் இன்மையால் அவர் இப்போது விளக்கமறியலில் இருக்கிறார்.

## ஆசிரியரை நிந்தனைசெய்ததாக.

உரும்பிராய் சைவாங்கிலவித்தியாசாலைத் தலைமையாசிரியரான ஸ்ரீ K. S. இராஜரத்தினம் அவர்களை நிந்தனைசெய்து அவரை அடிக்க எத்தனித்தார் என்று ஐயம்பிள்ளை விசுவலிங்கம் என்பவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்திற் குற்றம் சாட்டப்பட்டார் இன்று (வியாழன்) அவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது எதிரிதானசெய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு வாதியை மன்றாட்டம் கேட்டார். எனவே வழக்குத் தள்ளுப்பட்டது.

## சிரட்டைக்கரி ஏற்றுமதி.

சென்ற 28-4-35 இல் கொழும்பிற்கு வந்த ஜெர்மன் கப்பலில் 400 டன் நிறையுள்ள சிரட்டைக்கரி கொழும்பில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. மார்ச் மாதத்தில் 31 522 ரூபா பெறுமதியான 606 டன் சிரட்டைக்கரி பிரான்ஸுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. எல்லாமாக ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு என்னும் மூன்று மாதங்களிலும் 86,062ரூபா பெறுமதியான 1616 டன் சிரட்டைக்கரி இலங்கையிலிருந்து அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதியாயிருக்கிறது.

## கச்சேரிப் பொக்கிஷசாலை திறபடுகிறதில்லை.

நேற்றுச் சிங்கப்பூர் உத்தியோகஸ்தருடைய உபகாரவேதனத்தைக் கொடுக்கவேண்டிய நாளாதலால், அப்படிக் கொடுக்கும்வண்ணம் யாழ்ப்பாணம் கச்சேரியில் உள்ள பொக்கிஷசாலையின் அதிகாரிகள் திறந்தபோது, அது திறக்கப்படவில்லை. பின்னரும் அதனைத் திறப்பதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. இற்றைவரையில் திறபடாமலே யிருக்கின்றது.

# கன்னிகையை வஞ்சித்த வழக்கு.

## சரஸ்வதிக்குப் பங்கம் நேர்ந்த வரலாறு

## யாழ்ப்பாணம் நீதிஸ்தலத்தில் மீட்டும் விசாரணை

நல்லூரிலே சின்னம்மா என்னும் பெண்ணை ஏமாற்றி, அவளது பாலாகிய சரஸ்வதி என்னும் மங்கைக்கு ஒழுங்கையில் தாலி கட்டினர் என்றும் அதற்குத் துணையாக நின்றனர் என்றும்,

1. கந்தையா,
2. கனகரத்தினம்,
3. சதாசிவம்,
4. குமாரசுவாமி,
5. சபாரத்தினம்,
6. சுப்பையா,

என்னும் இவர்கட்கு மாறாகத் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிபதி ஸ்ரீ K. ஆழ்வாப்பிள்ளை அவர்களது முன்னிலையில் சென்ற செவ்வாய்க்கிழமை (30-4-35) மீட்டும் விசாரணை செய்யப்பட்டது.

### சின்னம்மாவின் சாட்சியம்.

ஏமாற்றப்பட்ட, சரஸ்வதியின் தாயாகிய சின்னம்மா பின்வருமாறு சாட்சியம் கொடுத்தாள்:—

"கந்தையா, சபாரத்தினம், குமாரசுவாமி என்னும் மூவரும் என் மகளுக்குக் கலியாணம் பேசி வந்தனர். குமாரசுவாமி காசு வேண்டும் என்று சொன்னார். பின்னர் 6-ம் தேதி வந்து அன்றே கலியாணத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னார்கள். எனது இனத்தவர் இக் கலியாணம் ஒழுங்காவதற்கு மாறாக நிற்பானமையால் அவர்களுக்கு இதனைப்பற்றி அறிவிக்காது விடுவதே நல்லதென்று கந்தையாவும் குமாரசுவாமியும் புத்திமதி கூறினார்கள். நான் அவர்களின் கதையை நம்பி எனது இனத்தவர்க்கு இதைப்பற்றி அறிவிக்கவில்லை."

இரண்டாம் எதிரி கனகரத்தினம் (தளையசிங்கம்) திற்காக ஏற்பட்ட பிறக்கர் ஸ்ரீ H R. அரியகுட்டி அவர்களின் குறுக்கு விசாரணையின்போது ஷெ சாட்சி கூறியன:

"இரண்டாம் எதிரியைக் கண்டவுடன் அவர்க்கு என் மகளை விவாகஞ் செய்து கொடுக்க மனமிசைந்தேன். தளையசிங்கத்தின் கைச்சாத்திட்டுக் கனகரத்தினத்தால் அனுப்பப்பட்ட றிஜிஸ்தர் காகிதம் எனக்குச் சுன்னாகத்திற் கிடைத்தது"

"மூன்றும் எதிரியான சதாசிவத்தை முதன் முதற் பிறகர் குமாரசுவாமி வீட்டிற்றான் கண்டேன். ஆனால் நான் அவருடன் ஒன்றும் பேசவில்லை. வியாழக்கிழமை எனது மகளை வட்டுக்கோட்டைக்கென்று மாகியப்பிட்டிக்கு அழைத்துச் சென்று அங்கே சதாசிவத்தின் சகோதரி வீட்டிற் கொண்டுபோய் விட்டார்கள். நாலாம் எதிரியாகிய குமாரசுவாமியே நான் எழுதினதாகக் கல்முனை வாவில் உள்ள தளையசிங்கம் என்பவர்க்குக் கலியாண விஷயமாய் எழுதினர். குமாரசுவாமி இந்த விவாகத்தை ஒழுங்கு செய்ய வேண்டுமென்று 3 மாதத்திற்கு மேல் ஓடித்திரிந்தார். இவ் விவாகத்திற்கு எனது இனத்தவர்கள் மாறு என்று குமாரசுவாமியும் கனகரத்தினமும் கூறினார்கள்."

இதன்பின் சரஸ்வதி என்னும் கன்னிகை மீட்டும் விசாரணை செய்யப்பட்டாள்:—

"எனது வயது 15. எழுத வாசிக்கத் தெரியும். எனக்கு "விவாகம்" நடந்த தினத்து, கந்தையா, கனகரத்தினம், சதாசிவம், குமாரசுவாமி, சபாரத்தினம், சுப்பையா என்னும் இவ்வெதிரிகளுடன் சதாசிவத்தின் சகோதரி வீட்டுக்குப்போனேன். இரண்டாம் எதிரியான கனகரத்தினம், காரிலேயே எனக்குத் தாலி கட்டினர். அன்று சாயங்காலம் அல்வாய்க்குப் புறப்பட்டோம். அங்கே எதிரிகள் என்னை, என்னிலும் பார்க்க வயது முதிர்ந்த ஓர் பெண் இருக்கும் வீட்டில் விட்டார்கள். சிறிது நேரத்தின்பின் கந்தையாவை ஒழிந்த ஏனையோர் போய்விட்டார்கள். நடுச்சாமத்தில் கந்தையா என்னிடம் வந்து ................................ பலாத்காரமாக என்னைக் கற்பழித்தார். நான் சத்தமிடாதபடி வாயைத் துணியால் அடைத்தார்.

"சதாசிவமும் சுப்பையாவும் அடுத்த நாள் வந்து என்னைக் கற்பழிக்க முயற்சித்தார்கள்; ஆனால் நான் உடன்படவில்லை"

ஸ்ரீ அரியகுட்டியின் குறுக்கு விசாரணையின்போது சரஸ்வதி கூறியன:

"கனகரத்தினம் என்னுடன் மாகியப்பிட்டிக்கு வந்தாரன்றி அல்வாய்க்கு வரவில்லை. தான்போய்த் தனது சுற்றத்தவரைச் சமாதானப் படுத்திக் கொண்டு வருவதாகச் சொல்லிக் கனகரத்தினம் சென்றுவிட்டதால் நான் அல்வாயிலேயே நின்றேன். திரும்பி வந்ததும் கனகரத்தினம் சமாதானத்தைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. நாலாம் எதிரியான குமாரசுவாமி எனது சொந்தக்காரன். அவர் சொன்னபடியால்தான் நான் காரிலேறி அல்வாய்க்குப்போக உடன்பட்டேன். வழியில் சுன்னாகத்தில் கனகரத்தினமே குடிக்கத் தண்ணீர் வாங்கித் தந்தார். கனகரத்தினம் அல்வாயில் என்னை விடும்போது என்னுடன் ஒன்றும் பேசவில்லை. அப்போதுதான் இவர்கள் நடத்தையில் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

"நான் எனக்குத் தாலி கட்டிய கனகரத்தினத்துடன் பேசுவதும் கந்தையாவுக்கு, விருப்பமில்லை. அத்துடன் எனக்குக் கனகரத்தினத்துடன் பேசவாவது, இருக்கவாவது நேரம் கிடைக்கவில்லை"

### பெருமாள் சாட்சியம்.

"எனது சகோதரியைத் தேடத்தொடங்கிய பின்னரே, நா. தளையசிங்கத்திடம் இருந்து ஓர் கடிதம் எமக்குக் கிடைத்தது. எனது சகோதரி கந்தையாவினால் கற்பழிக்கப் பட்டபடியால் கனகரத்தினம் அவளைப் பெண்ணாகக் கொள்ள மறுத்து விட்டார்"

இதன்பின் பிறக்கர் ஸ்ரீ C. T. குமாரசாமி முதலியோர் விசாரணை செய்யப்பட்டபின் விசாரணை மேமீ 7உ எனத் தவணை யிடப்பட்டது.

# பகிரங்கக் கூட்டம்

—:*:—

## வேலணைப் பாலத்தினின்றியமையாமை.

வேலணைத் தீவிலுள்ள பல அபிமானிகளின் முயற்சியால் 24-4-35 மாலை 3½மணியளவில் சரவணை நாகேச்சுவரி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. சினவ் பாலசிங்கம் அவர்களின் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் ஆரம்பமாயது.

அக்கூட்டத்தில் திரு. மு. மயில்வாகனமவர்கள் ஓர் தேசிய மகாசபையை நிறுவவேண்டுமெனப் பிரேரிக்க திரு. த. சம்பந்தன் அதை அநுவதித்தார். பிரேரித்தவரும் அநுவதித்தவரும் எம் நாட்டுத் தொண்டுகளைச் செவ்வனே புரிவதற்கு ஓர் தேசிய மகாசபை இன்றியமையாததெனப் பல உதாரணங்களைக் கொண்டு விளக்கினர். ஷெ பிரேரணையைச்சபையோர் அங்கீகரித்தமையால் உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெற்றது.

போஷகர்:— திரு. வை. விஜயரத்தினம்
தலைவர்:— திரு. சினவ் பாலசிங்கம்

உபதலைவர்:
- திரு. A. L. தம்பையா
- திரு. K. V. இராசையா
- திரு. மு. மயில்வாகனம்

செயலாளர் த. சி. சம்பந்தன்
பொருள்காப்பாளர் திரு. V. செல்வதுரை

பின்னர் திரு. த. தில்லைநாதனவர்கள் வேலணைத் தீவை யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைக்கும் விஷயமாகச் சுருக்கமாகவும் தெளிவாகவுங் கூறிப் பின்வரும் பிரேரணையைச் சமர்ப்பித்தார். அது திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்களால் அநுவதிக்கப்பட்டு சர்வ அங்கீகாரம் பெற்றது.

"வேலணைத் தீவினையும் யாழ்ப்பாணக் குடாநாட்டினையும் ஓர் பாலத்தினால் இணைத்துத் தருமாறு போக்குவரத்து மந்திரசபையாரை இச்சபை பணிவாக வேண்டிக்கொள்கிறது."

6 மணியளவில் தலைவருக்கு நன்றி கூறியதும் கூட்டம் கலைந்தது.

# இடையனும் ஆடுகளும் இறந்தன.

பழனிக்குச் சமீபமாகவுள்ள பாலசுந்தரபுரம் என்னும் கிராமத்தில் ஓர் இடையன் 25 ஆடுகளை மேய்த்துக்கொண்டு நின்றபோது அவ்விடத்தில் மின்னல் வீழ்ந்ததால் இடையனும் ஆடுகளும் நாசமாயின.

# கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 7256.

1. வீரகத்தியார் ஆறுமுகமும் 2. பெண் செல்லம்மாவும் வண்ணார்பண்ணை கிழக்கு — வழக்காளி.

எதிர்.

செல்லத்துரை பொன்னுத்துரை வண்மேற்கு — எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 7256ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் அணைக்காணியை 1935ம் வருஷம் வைகாசிமீ 27உ திங்கட்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## காணி விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வண்ணார்பண்ணை மேற்கில் இருக்கும் காணி "புதுதன்வளவு" நிலப்பரப்பு இலாச்சம் 2ம் கல்வீடும், வான்பயிர், செய்பயிர்களும், தெற்கு எல்லையில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரிமையும், எல்லைகள் கிழக்கு தெருவும் வடக்கு செல்லத்துரை காசிநாதரினதும், அவரின் பங்காளர்களினதும் ஆதனம் மேற்கு மாதர் நடேசனினதும் பங்காளர்களினதும் ஆதனம் தெற்கு முருகேசு முத்துவேலுவின் ஆதனம். இந்தச் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணியும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவையாகும்.

R. VaitheasparanIyer,
கொமிஷனர்.

1935ஹூ சித்திரைமீ 27உ.
(Mis. 41. 2-5-35.)

# கோட்டுவிற்பனவு விளம்பரம்.

இல. 6825

1. முருகேசர்பிள்ளை சுப்பிரமணியம் கனகசூரியர் பெண் 2. செல்வநாயகி வண்கிழக்கு தற்போது வெள்ளவத்தை — வழக்காளி.

எதிர்.

சந்தியாப்பிள்ளை அருணப்பா கரையூர் — எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6825ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் அணைக்காணியை 1935ஹூ சித்திரைமீ 30உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## காணி விபரம்.

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணம் டவுனைச்சேர்ந்த கரையூரில் இருக்கும் காணி "செம்பன் தறையும் செபாஸ்புளியடிப்புலம்" பரப்பு நில இலாச்சம் 6 குளி 3ம் கல்வீடும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கு ஆசைப்பிள்ளையின் பெண் விக்டோரியா, இராசம்மாவினதும் பங்காளர்களுடைய ஆதனமும் வடக்கு மார்த்தி நேசுவின் மகன் இலட்சுமியினதும், பங்காளர் அந்தோனிப்பிள்ளை வயித்தியாம் பிள்ளையினுடைய ஆதனமும் வாலஞ்சென்ற பேதுருப்பிள்ளையின் பெண் இராசம்மாவின் உரிமைக்காறரின் ஆதனமும் மேற்கு றோட்டு தெற்கு காலஞ்சென்ற விசென்திப்பிள்ளையின் பெண் விக்டோரியாவின் ஆதனம் இதற்குள் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

R. Vaitheasparan Iyer,
கொமிஷனர்.

1935ஹூ ஏப்பிறல்மீ 1உ
(Mis. 43. 2-5-35.)

# கோட்டு விற்பனவு விளம்பரம்.

இல. 6664.

வீரவாகு வயிரமுத்து ஏழாலை — வழக்காளி.

எதிர்.

சுப்பிரமணியர் அருணாசலம் கைம்பெண் சிவக்கொழுந்து உரும்பிராய் — எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6664ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக் காணிகளை 1935ம் வருஷம் வைகாசி மாதம் 20ந் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

## முதலாம் காணி விபரம்.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த உரும்பிராயில் இருக்கும் காணி "குளத்திற்பக்கை" நிலப்பரப்பு 7½ யும் செய்பயிர்களும். எல்லைகள் கிழக்கும், வடக்கும் சுப்பிரமணியர் தாமோதரம்பிள்ளையினதும் அவரின் பங்காளர்களுடையவும் உரிமைக்காறரின் ஆதனம். மேற்கு ஒழுங்கை, தெற்கு சின்னத்தம்பி வைத்திலிங்கத்தினதும் அவரின் பங்காளர்களுடையதும், வைத்திலிங்கம் பெண் சின்னப்பிள்ளையினுடையவும் ஆதனம் இதிற் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய ஆதனம்முழுவதிலும் சொரிபலாக அரைவாசி; அதில் உள்ளவைகளும் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

## இரண்டாம் காணி விபரம்.

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த உரும்பிராயில் இருக்கும் காணி "விக்கிருந்தன்" நிலப்பரப்பு இலாச்சம் 104, ½ இதில் சொரியலாக நிலப்பரப்பு இலாச்சம், 5ம் 5, $\frac{19}{64}$ குளியும் $(\frac{2038}{40272})$ பங்குகள் முழுக்காணியிலும், கிணற்றுப்பங்கும், நடுக்காணியில் நிற்கும் 28 மாமரங்களில் வடக்குப்பக்கமாக 8 மாமரங்களும் கிழக்குப்பக்கமாக இருக்கும் வீடும் கிணறும் பிறக்கலாகவும், மற்றும் இதில் உள்ள வான்பயிர் செய்பயிர்களும் பனைகளும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தர் ஐயம்பிள்ளையின் ஆதனமும், வடக்கு கந்தர் ஐயம்பிள்ளையின் ஆதனம், மேற்கும், தெற்கும் ஒழுங்கை, இதில் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணியில் சொரியலாய் நிலப்பரப்பு 5ம் குளி 5 $\frac{19}{64}$ம் அதற்குள் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

## மூன்றும் காணி விபரம்.

(3) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கைச்சேர்ந்த உரும்பிராயில் இருக்கும் காணி "பிடித்தவாடை" நிலப்பரப்பு இலாச்சம் 6½. இதில் சொரியலாக ¼ பங்கும் இந்தக் காணியில் இருக்கும் வீட்டிலும் கூடத்திலும் ½ பங்கும் போட்டிக்கோவிலும் சமையல் அறையிலும் மற்றும் கொட்டில்களும் முழு உரித்தும், செய்பயிர்களும் கிணறும், எல்லைகள் கிழக்கு மாப்பாணர் பொன்னையாவின் ஆதனமும் இளையதம்பி கைம்பெண் நாகமுத்துவின் ஆதனம். வடக்கு இளையதம்பி கைம்பெண் நாகமுத்துவின் ஆதனமும் பங்காளர்களின் ஆதனமும், வேலுப்பிள்ளையின் பெண் வள்ளியம்மையின் ஆதனமும் மேற்கு ஒழுங்கை. தெற்கு மாப்பாணர் பொன்னையாவினதும் பங்காளர்களினதும் ஆதனம். இதில் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணியிலும் மற்றும் அதில் உள்ளவைகளிலும் சொரியலாய் மேற்சொல்லப்பட்ட பங்குகளும் அதில் அடங்கியவைகளும் சேர்ந்தவைகளும்.

1935ஹூ சித்திரைமீ 20உ.

(Mis 22, 25 4 & 2-5-35) R Vaitheasparan Iyer, கொம்மிஷனர்.

# NOTICE OF SALE.

## விற்பனவு விளம்பரம்.

யாழ்ப்பாண டிஸ்திரிக்கோட்டின் 7395-ம் இலக்க சட்டு வழக்கில் 1935 ஹூ சித்திரைமீ 21-ந் தேதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணி 1935 ஹூ வைகாசிமீ 25 தேதி சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

## விபரம்.

உரும்பிராய் கம்பாபிள்ளை நடராசா — வழக்காளி
(1) „ V சுப்பிரமணியம் இராசையனும் பெண்
(2) இரத்தினம்மாவும் = எதிரிகள்
மேற்சொல்லப்பட்ட வழக்கில் தீர்க்க தீர்வைப்படி எதிரிகள் வழக்காளருக்குக் கொடுக்க வேண்டிய பணம் ரூபா 1445-ம் இன்னும் ரூபா 1000 ச்கு 1935-ம் ஆடி மாதம் 11-ம் திகதி தவக்கம் இறக்கும் வரைக்கும் ஹூ 1க்கு 100க்கு 9 வீதம் வட்டியும் கோட்டுச் செலவும் ரூபா 139.84-ம்

## காணியின் விபரம்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று உரும்பராயிலுற குப்பிளானும் பெருமண சீமாவும் மறு பிரிவுகளும் பாப்பு நிலலாச்சம் 5-ம் பயிர்வகைகளும் கல்வீட்டில் அரைவாசியும் கிழக்கெல்லைக் காணியிலிருக்கும் புதுக்கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் மேற்கெல்லைக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் மேற்கெல்லைக்காணியின் தெற்குகாக வாய்க்கால வழியும் இந்தப் பரப்பு நிற்தாகுமெல்லை கிழக்கு நடராசா பெண் அன்னபூரணத்தின் காணி வடக்குறோட்டு மேற்கு பொன்னம்பலம் பெண் ராசாத்தையின் காணி தெற்கு அருட்பிரகாசம் முத்தையாவின் காணி இடக்கலும்.

P Rajaretnam,
Commissioner.

(Mis. 42. 2 5-35.)

# சோதிஸ்காமகிரியி னறிக்கை.

சமயாபிமான சீலர்களே!

ஈகுதிணைகைலாயம் என வழங்கும் ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பக்தர்குழாங்கள் பலைப் பிரதிக்ஷணம் புரிவது மிகவும் அபூர்வமான காரியமாயிருந்தமையால் ஸ்ரீ ஸ்கந்தமூர்த்தியினருளால் சென்ற 1927-ம் ஆண்டில் மறைந்திருந்த பாதையைத் திருத்தலானேன். அங்காட்டொடக்கம் யாத்திரிகர்களின் தாகசாந்தியின் பொருட்டு அச்சிகரத்தே ஓர் தண்ணீர்ப்பந்தலையுமமைத்து அது பல புண்ணிய சீலர்களினது ஊக்கத்தால் வருடாவருடம் செவ்வனே நடைபெற்று வந்தது. சென்ற வருடம் (1934) ஆடி மகோற்சவ 15 தினங்களிலும் மாணிக்க கங்கையிலிருந்து ஒரு தகரம் தண்ணீர் 40 சதவீதம் எடுப்பித்து இவ்வறனை வழுவாது கடைப்பிடித்தேன். இவ்வருடமும் இத்தரும கைங்கரியத்தை இடையூறின்றி நடாத்தப் போதிய பணமின்மையால், சைவாபிமானிகள் ஊக்கமுடன் ஈடுபட்டு இத் திருத்தொண்டைப் பூர்த்தி செய்து வைக்குமாறு தங்கள் அடிபணிந்து வேண்டிக்கொள்ளுகின்றேன். சைவசமய தனவந்தர்களிருப்பார்களேயானால் யாத்திரிகர்களது தாகத்தைச் சாந்தி செய்யும் பொருட்டு இத்தண்ணீர்ப் பந்தலை யேற்றுத் தாங்களே நடாத்துவார்களாக! அனேக சைவாபிமானிகள் இத் திருத்தொண்டி லீடுபடப் பின்வாங்குகின்றார்கள். அந்தோ இவர்களது பக்தியின் மாண்புதானென்னே!

ஸ்ரீ ஷண்முகப்பெருமானைப் பிரார்த்தித்து ஏதேனும் பணம் வைத்திருப்பவர்கள் அல்லது யாத்திரிகர்பணியிலும் தொண்டர்பணியிலும் பற்றுடையோர் தங்கள் தங்களாலியன்ற பண உதவி புரிந்து இறையருளைப் பெற்றுய்வார்களாக!!

பணத்தைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு மணி ஓடர் அல்லது போஸ்ரர் ஓடர் மூலம் அனுப்பவும்.

21—4—35
(Q. 20. 25-4 to 24-7-35.)

ஸ்ரீ கதிரமலை அடியான்
ரமண—சங்குசாது
கதிர்காமம், இலங்கை.

## மதம்மாற்றும் வேலைவேண்டாம்.

### கிறீஸ்துவப் பாதிரிமாரும் கிராமப்புனருத்தாரணமும்.

### மகாத்மாவின் புத்திமதி

மிஸ் எமிமி மக்பெர்ஸன் என்னும் பிரபல அமெரிக்கமாது, மகாத்மா காந்தியடிகளுடன், அன்னவரின் கிராமப்புனருத்தாரணத் திட்டம் சம்பந்தமாக வார்தாவிற் கண்டு சம்பாஷித்தார் கிராமப் புனருத்தாரண சேவையில் கிறீஸ்தவப்பாதிரிமார் எவ்வாறு உதவி செய்யலாம் என்று அம்மாது கேட்டதற்கு அடிகள் பின்வருமாறு கூறினர்.

"நாட்டுமக்களுக்குக் கிறிஸ்தவபாதிரிமார் அநேக நன்மைகளைச் செய்யலாம். என் கடன்பணிசெய்துகிடப்பதே என்ற உண்மையை அவர்கள் மேற்கொண்டு பயன் கருதாது சேவை புரியவேண்டும் தங்களுடைய மதத்திற்குக் கிராமவாசிகளை வசீகரிக்கும் நோக்கத்துடன் ஒருபோதும் சேவை செய்ய வொண்ணாது"

### நீதிஸ்தலத்திற் பொலிசாரின் தொல்லை.

கொழும்புப் புறக்கோட்டை, கொட்டாஞ்சேனை பகுதிகளில் இருந்து வழக்குகள் தொடர்வதற்குச் சில பொலிசார் கொழும்பு நகர நீதிஸ்தலத்திற்குச் சென்ற செவ்வாய்க்கிழமைவந்துநின்றனர். வந்துநின்றவர்கள் தம் கருமத்தைப் பார்த்துக்கொண்டு மற்றவர்களைப் போல் நிற்காமல், தங்களுக்குள்ளே "குசு குசு" வென்று சம்பாஷித்துக்கொண்டு நின்றனர். இதனைக் கண்ட பிரதி நீதிபதி மிஸ்ரர் T N C. திருச்செல்வம் அவர்கள், அப்பொலிசாரை நோக்கி, "நீவிர் இப்படி நீதிஸ்தலத்தில் நின்று பேசிக்கொண்டிருப்பீர்களேயானல் நீதிஸ்தலத்தை அவமதித்த குற்றத்தின் பேரில் உங்களுக்குத் தண்டனை விதிப்பேன்" என்று கண்டித்தார்

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ம் ஜுலை 8 ம் இலக்க சட்டச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் திரிகோணமலை 3 ம் நம்பர் கடைக்காரர் வே. த. வெற்றிவேற்பிள்ளை, வே. த. சிதம்பரப்பிள்ளை, வே. த. சாம்பிப்பிள்ளை என்பவர்களிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணை கடந்து மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1933 ம் ஆ. வைகாசி மீ

| இல. | உ. | கு. சதம். | நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 3240 | 3 | 10 04 | வெ அரிக்குக் காப்புசோடி 1 |
| 3470 | 22 | 28 76 | பூசார்த்திரம் பின்னுடன்மணி 10 |
| 1933 ம் ஆ. ஆனி மீ | | | |
| 3580 | 1 | 18 80 | இருபட்டு வெள்மட்டை மணி 1 க்கு மணி 73 |
| 3634 | 4 | 8 86 | இமிற்கல் திருகுபூ 1 |
| 3635 | 4 | 14 68 | இமிற்கல் சவுதகோர் 1 |
| 3636 | 4 | 12 | மோதிரம் 1 |
| 3656 | 6 | 26 04 | கைச்சங்கிலி 1 |
| 3699 | 9 | 7 | இமிற்கல் பதக்கம் 1 |
| 3719 | 10 | 14 04 | இமிற்கல் சவுதகோர் 1 |
| 3853 | 19 | 13 | ஒருகை செறுதுகோடு சோடி 1 |
| 3863 | 20 | 36 04 | தங்கக்காப்புசோடி 1 கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 3946 | 27 | 12 50 | இமிற்கல் நெறகாதோலைசோடி 1 இமிற்கல் டிம்மி 1 |
| 1933ம் ஆ. ஆடி மீ | | | |
| 4008 | 2 | 12 | இமிற்கல் பதக்கம் 1 |
| 4111 | 10 | 82 04 | இமிற்கல் மாலைப்பதக்கம் 1 |
| 4116 | 10 | 30 | சறப 1 |
| 4137 | 12 | 13 | வெ பாதசரம்சோடி 1 |
| 4207 | 18 | 11 | இமிற்கல் சவுத்கோர் 1 |
| 1933 ம் ஞு ஆவணி | | | |
| 5 | 1 | 8 | இமிற்கல் கலாவரைக் குச்சு சோடி 1 |
| 66 | 6 | 87 | இமிற்கல பத முடிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 84 | 7 | 6 | வளைபல்தகட்டுத் தண்டிகள். |
| 240 | 17 | 6 50 | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 215 | 18 | 12 | சிறுகல் காதோலைசோடி 1 |
| 360 | 27 | 15 | இமிற்கல காதோலைசோடி 1 |
| 1933 ம் ஞு புரட்டாதி மீ | | | |
| 425 | 2 | 6 | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 439 | 3 | 10 | செவ்வர்த்திதகோடுசோடி 1 கஇ |
| 443 | 4 | 7 | கலாவரைமோதிரம் 1 |

| இல. | உ. | கு. சதம். | நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 1933 ஆ. புரட்டாதி மீ | | | |
| 575 | 15 | 7 | இமிற் கல் வங் மோதிரம் 1 |
| 652 | 20 | 12 04 | வயிரமின்னி 1 |
| 1933-ம் ஆ. ஐப்பசி மீ | | | |
| 785 | 2 | 11 04 | ஒட்டுவளையல் 6 |
| 987 | 17 | 17 01 | அரைப்பவுண் 2 |
| 1050 | 22 | 16 04 | இமிற் கல் சவுதகோர் 1 |
| 1069 | 24 | 6 | கொப்புச்சிமிக்கி சோடி 1 |
| 1933-ம் ஆ. கார்த்திகை மீ | | | |
| 1194 | 2 | 25 04 | திருகுபூ 2 து. வை, ½பவுண் 1 |
| 1254 | 5 | 6 | சவுக்கமணி 1க்கு மணி 15 |
| 1298 | 11 | 90 04 | வெள்ளைக்கல் பென்டனுடன் சங்கிலி 1 |
| 1329 | 13 | 15 04 | இமிற் கல் சவுதகோர் 1 |
| 1369 | 16 | 30 | காசித்தட்டுக்கோர்வை 1க்கு தட்டு 10 குடம் 1 பூசார்த்திரமுடன மணி 2 |
| 1445 | 21 | 6 04 | சிறுமோதிரம் 1 |
| 1449 | 22 | 12 04 | கல் மோதிரம் 1 |
| 1933 ஞு மார்கழி மீ | | | |
| 1580 | 2 | 80 04 | ஒருபட்டிலை மாலை 1 [சோடி 1 |
| 1590 | 4 | 55 04 | கு வை பவுண் 2 வெளிக்காப்பு |
| 1628 | 6 | 5 54 | வளையற்றகட்டு துண்டுகள் 7 |
| 1690 | 10 | 14 04 | சிறு அச்சுக்காப்பு சோடி 1 |
| 1692 | | 90 | பவுண் 1 உடன் சங்கிலி 1 குண்டு வெள்ளி |
| 1721 | 13 | 41 04 | இமிற் கல் கடுக்கன் சோடி 1 க இ குருசு 1 நட்சத்திரம் 2 இமிற் கல் சிறு பதக்கம் 1 பழைய கல்லட்டியல் 1 |
| 1736 | 15 | 6 04 | திருகுபூ 1 |
| 1866 | 23 | 15 04 | இமிற் கல் செமிப்பின் 1 |
| 1870 | 24 | 8 04 | வயிரமின்னி 1 |
| 1883 | | 8 04 | சிறு தங்கக் காப்பு சோடி 1 |
| 1903 | 17 | 16 | இமிற் கல் தோடு சோடி 1 பிற்கம்பி இல்லை |

விற்பனவு:— 1935 ம் ஆண்டு யுவ வருஷம் வைகாசி மாதம் 4 ந் திகதிக்குச்சரியான 17 5 35 வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகேகலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. பொ. விசுவநாத உடையார்.
வெந்தீஸ்மேஸ்தர்
திரிகோணமலை
24-4 35.

(Mis 37.29·4 & 2 5 35)




# குழந்தைகள் அதிகம் சக்தியை உபயோகிக்கின்றனர்.

## அவர்கள் ஆரோக்கியமாய் வளரப் பிரத்தியேக பெலம் தேவை.

"ஹோர்லிக்ஸ்" பால் சக்தியைக் கொடுத்து, பெலமுள்ள எலும்புகளையும் தசைகளையும் வளர்க்கின்றது.

படிக்கும்போதும் விளையாடும்போதும் குழந்தைகள், தங்கள் மூளையையும் தேகத்தையும் நாள் முழுவதும் களைக்கப்பண்ணுகிறார்கள். இக்களைப்பைப் புஷ்டியான சாப்பாட்டினுற் சரிப்படுத்தவேண்டும், ஏனெனில், உபயோகிக்கப்படும் சக்தியை மாத்திரம் கொடுப்பதன்றி, தேக வளர்ச்சிக்கான ஜீவசத்துக்களையும் இச்சாப்பாடு கொடுத்தல் வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட இரு காரியங்களையும் ஓர் உணவு கொடுக்காவிட்டால் குழந்தைகளின் வளர்ச்சி பங்கப்படும். அத்துடன் அவர்களின் பெலமும் குறையும் என்பதை வைத்திய நிபுணர் அறிவர். தேக வளர்ச்சியும் தேகபெலனும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டதாய்க் குழந்தைகள் விஷயத்தில் இருக்கவேண்டும்

### பாதுகாப்புக்கேற்றது ஹோர்லிக்ஸ் பாலே.

பணத்தை அதிலோ, இதிலோ என்று விடவேண்டாம். உங்கள் குழந்தைகளுக்கு தினம் ஒருமுறை அல்லது இருமுறை ஹோர்லிக்ஸ் பாலாகாரத்தைக் கொடுத்து, அக்குழந்தைகள் பிறகாலத்தில் ஆரோக்கியத்துடன் வாழ இப்போதே அத்திவாரம் இடுங்கள்.

குழந்தைகளின் உணவுடன் ஹோர்லிக்ஸ் பாலாகாரமும் கொடுப்பதால் அவர்களுக்குத் தேவையானதெதுவோ அது கொடுக்கப்படுகிறது. காடோறும் உபயோகமாகும் சக்திக்குப் பதிலாகப் புதிய சக்தியும், அவர்களின் வளர்ச்சிக்கான சேயப் புஷ்டியும் உதவப்படுகிறது. ஹோர்லிக்ஸில் உள்ள ஓர் விசேஷ மென்னவெனில் அதில் உள்ள சத்துப் பொருள்கள் யாவும் ஜீரணிக்கப்படுகின்றன. அது அப்படித் தேகத்தாற் கிரகிக்கப்படுகிறபடியால்தான், கடின பதார்த்தங்களை உட்கொள்ள முடியாத நோயாளிகளுக்கும் நோய்வந்தவர்களுக்கும் ஹோர்லிக்ஸை ஒழுங்காகக் கொடுக்கவேண்டுமென டக்டர்மார் விதிக்கின்றனர்.

## ஹோர்லிக்ஸ்

முதல் முதலான மோல்ற்றட் பால்

### ஹோர்லிக்ஸ் பாலின் தன்மை.

பசுவின்பாலுடன், கோதமை, மோல்ற்றட்வாளி என்பவற்றின் திறமான ஜீவசத்துப் பொருள்களைக் கொண்டது. ஹோர்லிக்ஸ் பால் முழுவதும் ஜீவசத்துப் பொருள் நிறைந்ததே. குழந்தைகள் இப்பாலை விரும்புகின்றனர். வெந்நீரிலாவது, தண்ணீரிலாவது நன்கு கரையும். ஹோர்லிக்ஸ் கலக்கும் கருவியால் கரைப்பின் மிக உருசியானது. இக்கருவி கடைகளில் அல்லது 75 சத முத்திரை யனுப்பி கொழும்பு மில்லர் அன் கம்பனி லிமிற்றெட் இல் பெறற்பாலன.




சாதாரண பால் அல்லது சொக்கலேற் கலந்தது.
முழுவதும் தேகபுஷ்டிக்கான உணவு.

Mis 40 2-5-35 to 16-5-35


## கோட்டு விற்பனவு விளம்பரம்.

### இல. 6653

வைத்திலிங்கம் கைம்பெண் தெய்வானைப்பிள்ளை —வழக்காளி,

சிறுப்பிட்டி:
1. சம்பு, கமலியாயம்
2. செட்டினம்

நீர்வேலி,

எதிர்,

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 6653 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் நாலு துண்டுக் காணிகளை 1935 ம் ஆண்டு வைகாசி மாதம் 13 ம் தேதி திங்கட்கிழமைபிற்பகல் 4 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

### காணிகளின் விபரம்.

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதியைச் சேர்ந்த நாவற்குளியில் இருக்குங்காணி "வடலிப் பெருதன் வளவும், குமாரு வளவும்" நிலப்பரப்பு இலாச்சம் 18½ வான்பயிர் செய்பயிர்களும் பனைகளும் எல்லைகள்: கிழக்கு:— வேலாயுதர் ஆறுமுகத்தின் ஆதனம் வடக்கு முத்தர் தம்பியின் மகன் மாணிக்கத்தின் ஆதனமும் மறுபேர்களின் ஆதனமும் மேற்கு கார்த்திகேசு முத்தரின் மயினர் பின்னைகளின் ஆதனம், தெற்கு நந்தஉடையார் கறுப்பையாவின் ஆதனம்; இந்தச் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கிய ஆதனமும், அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும், வடகிழக்குப் பக்கமாக வழி உருத்தும்,

2. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதியைச்சேர்ந்த நாவற்குளியில் இருக்குங்காணி, "தம்பையன்வயல்" நெற்பரப்பு இலாச்சம் 10 எல்லைகள் கிழக்கு இராமலிங்கம்பெண் தில்லைப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனமும் வடக்கும் தெற்கும் செல்லப்பாவின் பெண் இராசம்மாவின் உரிமைக்காறரின் ஆதனம் மேற்கு வேலாயுதர் சிவகாமனின் ஆதனம் இந்தச் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கிய காணி முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்,

3. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த நாவற்குளி—கைதடியில் இருக்குங்காணி "கலையப்புறணிக் கொட்டை வளவும் வயலும் கலாயப்புறணக் கெட்டை வடக்கும்" நெற்பரப்பு இலாச்சம் 82⅛ வீதம் வான்பயிர் செய்பயிர்களும் வடலிகளும் இவைமுழுவதிலும் சொரியலாய் ⅙ பங்கு. எல்லைகள் கிழக்கு ஒழுங்கையும் கந்தர் குளந்தைவேலுவின் உரிமைக்காறரினதும் மறுபேர்களினதும் ஆதனம், வடக்கு சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோவில் ஆதனமும் சின்னத்தம்பி கந்தருடையவும் மறுபேர்களினதும் ஆதனம். மேற்கு தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் பிள்ளையின் உரிமைக்காறரினதும் மறுபேர்களின் ஆதனமும், தெற்கு சந்திரசேகரர் பெண் தையல்நாயகத்தின் ஆதனம், இந்தச் சொல்லப்பட்ட எல்லைகளுக்குள் அடங்கிய காணி முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

4. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த கைதடி—நாவற்குளியில் இருக்கும் காணி "கலையப்புறணைகெட்டை" வளவு நெல்பரப்பு இலாச்சம் 30. எல்லைகள்கிழக்கு செல்லையாவின்பெண் அம்பிகைப்பிள்ளையின் ஆதனமும் மற்றவர்களின் ஆதனமும். வடக்கு வேலம்பிராய்க் கண்ணகைஅம்மன்கோவில்; மேற்கு சுப்பிரமணியர் சின்னலிங்கத்தினதும் மறுபேர்களினதும் ஆதனம், தெற்கு சின்னலிங்கத்தின் பெண் தங்கத்தின் உரிமைக்காறரினதும் சிற்றம்பலத்தின் பெண் அம்பிகைப்பிள்ளையினது உரிமைக்காறரின் ஆதனம். இந்தச் சொல்லப்பட்ட எல்லைக்குள் அடங்கியகாணி முழுவதும் அடங்கியவைகளும் அதைச் சேர்ந்தவைகளும்.

1935 ஞு சித்திரை மீ 15௳.

R. Vaitheasparan Iyer.
கொம்மிஷனர்

Mis 21. 25 4·35 & 2-5-35

## கோட்டு விற்பனவு விளம்பரம்.

### இல. 716 :

சரவணமுத்து கந்தையா வழக்காளி கோண்டாவில்

எதிர்

வேலுப்பிள்ளை கைம் பெண் செல்லமுத்து கோண்டாவில் —எதிராளி.

யாழ்ப்பாணம் பெரியகோட்டின் 7162-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகளை 1935 ஞு வைகாசி மீ 22௳ புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

### முதலாம் காணி விபரம்.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோண்டாவிலில் இருக்கும் காணி "வடுவ ஓடை" நிலப்பரப்பு இலாச்சம் 5 கிணறும் தென்னமரங்களும எல்லைகள் கிழக்கு எதிராளியின் ஆதனம் வடக்கு சுப்பர் தம்பிப்பிள்ளையினதும் மறுபேர்களினதும் ஆதனமும் மேற்கு சுப்பையாவின் பெண் சின்னப்பிள்ளையின் ஆதனமும் தெற்கு குமரேசம் பெண் ஆச்சைமுத்துவின் ஆதனம், இதில் மற்றவர்களின் கிணற்றுப் பங்கும், வளிவாய்க்கால் வழிப்பங்குகள் பிறநீங்கலாக, இந்த எல்லைகளுக்குள் அடங்கிய ஆதனம் முழுவதும் அதைச் சேர்ந்தவைகளும் அடங்கியவைகளும்.

### இரண்டாம் காணி விபரம்.

(2) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோண்டாவிலில் இருக்கும் காணி "காத்தாளை" நிலப்பரப்பு இலாச்சம் 4-ம் வடலிகளும், எல்லைகள் கிழக்கு கந்தையா சரவணமுத்துவின் ஆதனம் வடக்கு முத்தையாவின் பெண் ஆச்சிமுத்துவின் ஆதனம், மேற்கு சுப்பர் சதாசிவக்குருக்களின் ஆதனம், தெற்கு ஐயாத்துரையின் பெண் அன்னம்மாவின் ஆதனம், இதற்குள் அடங்கிய காணி முழுவதும் அதில் அடங்கியவைகளும் சேர்ந்தவைகளும்.

1935 ஞு சித்திரை மீ 17 ௳.

R. Vaitheasparan Iyer.
கொம்மிஷனர்.

(Mis 23. 25 4-35 & 2-5-35)

## நூல்களைப்பற்றிய குறிப்பு.

கனிஷ்ட பாடசாலை விடுகைத் தராதரப் பத்திர வகுப்பு (1936-ம் ஆ )
இலக்கியக் குறிப்பு
(செந்தமிழ்ச் செல்வமும் மணிமேகலையும்)

இது: சென்னைச் சர்வகலாசங்கத்தாரால் வித்வான் பட்டம் வழங்கப்பெற்றவரும், இயற்றமிழ்ப் போதகாசிரியருமாகிய வண்ணார்பண்ணை, ஸ்ரீ ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றி, சண்முகநாதன் புத்தகசாலையதிபரால் வெளியிடப்பெற்றது.

இவ்வுரை நூல், பிரதானமாக நூலின உட்பிரிவுகளாகவரும் தலைங்கப் பெயர்களின் தொகை தொடர்களை விரித்தும் விளக்கியும், மூலத்தின் சொல்நயம் பொருள்நயம் ஆழ்ந்த கருத்து இவைகளைப் புலப்படுத்தியும், உவமான உவமேயங்களின் பொதுத்தன்மைகளை விரித்து நயங்களை விளக்கியும், சிலப்பதிகாரத்தின்கண் அடியார்க்கு நல்லாரைப் போலப் பாடாந்தரமான பல உரைகளைக் காட்டியும், அவற்றுள் ஒவ்வாத சிலவற்றை எடுக்காட்டி மறுத்துத் தன் துணிபுரைத்தும், தொனிப் பொருள்களையும் குறிப்பெச்சங்களையும் புலப்படுத்தியும், கடினமான புணர்ச்சிவிதிகளை விளக்கியும், மூலத்திற் குறிப்பிடப்பட்ட கதைகளை விரித்தும், ஆவசியகமான இடங்களிற் பிறநூன் மேற்கோளெடுத்துக் காட்டியும் சொல்லிலக்கணம் எழுவாய் பயனிலை முதலிய இன்னோரன்ன விஷயங்களைத் தன்னகத்தடக்கியும் விளங்குகின்றது.

கன்னனது கடைநாள் 2-ம் செய்யுளில் கண்ணபிரான் வேதியனாகச் சென்று தன் குறையைக்கன்னனிடம்கூறும்போதும்,4-ம் செய்யுளிற் கன்னன் கூற்றிலும் "பெரியார் வாக்கு மறந்தும்பொய்மையிற்பொருந்தா" என்ற நியமத்தாற் கவியின் நோக்கத்திற்கியைய உள்ளுறைப் பொருள் விரித்த வகை போன்ற நயங்கள் பலவற்றைக் காணுங்கால், இவ்வுரை இலக்கியச் சுவையுணர்விற்கும் தமிழ்ப் பாஷையுணர்விற்கும் உபகாரமானது என்னலாம்.

இதன்கண் வரும் திரௌபதி மாலையிட்டிற்கு வித்துவ சிரோமணி ந. ச பொன்னம்பலபிள்ளையவர்கள் எழுதிய உரை அநுபந்திக்கப்பட்டுள்ளது. உரை வெளிவாராத அகநானூறு, உதயணன்கதை, சூளாமணி, தேவாரம் போன்ற நூல்களின் செய்யுட்களுக்கும் யாவரும் போற்றத்தக்க முறையில் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைநூல் குறித்த வகுப்பிற் பயிலும் மாணாக்கருக்குப் பெரிதும் பயன்படுமென்பது திண்ணம். இது யாழ்ப்பாணம் ஸ்ரீசண்முகநாதன் புத்தகசாலை அதிபர்களால் தமது சண்முகநாதயந்திரசாலையில் தெளிவுற அச்சிட்டு வெளிவந்துள்ளது. பிரதியொன்றன் விலைசதம் 60 (அறு சo) பெறவிரும்புவோர் வண்ணார்பண்ணை ஸ்ரீ சண்முகநாதன் புத்தகசாலையிலும் ஏனைய பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாகும்.

### ஜெர்மனியும் கடற்படையும்

ஜெர்மனி தனது கடற்படையை முன்னொருபோதுமில்லாதவாறு பெலப்படுத்த முனைந்திருக்கிறது என இற்றலியிற் பிரசுரமாகும் "கியோர்னேல் ட இற்றலியா" என்னும் பத்திரிகை கூறுகிறது. ஜெர்மனி வெர்ஸெயில்ஸ் உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறி தனித்தனி 20000 டன் நிறைகொண்ட இருபெரும் யுத்தக் கப்பல்களையும், தனித்தனி 10000 டன் நிறைகொண்ட இரு சாதாரண யுத்தக் கப்பல்களையும் பல நீர்மூழ்கிக் கப்பல்களையும் இரகசியமாகக் கட்டுகின்றது என மேற்படி பத்திரிகை கூறுகிறது.

### கல்கத்தாமேயர்மீது வியபிசாரக் குற்றச்சாட்டு.

கற்கத்தா மேயர் (நகரத்தலைவர்) ஆன ஸ்ரீ நளினரஞ்சன் சர்க்கார் தமது மருகியும் ஆசிரியர் P. N சர்க்கார் மனைவியுமான ஸ்ரீமதி பிஞதேவியுடன் வியபிசாரம் செய்தாரென்று மேற்படி ஆசிரியரால் தொடரப்பட்ட வழக்கில் மேயர் நிரபராதியானார்.

## இந்திய அரசியற் செய்திகள்.

—:o:—

### திருப்தியா!

பிரிட்டிஷ் அரசினர் தயாரித்துள்ள சமஷ்டி அரசியல் மிகவும் பூரணமற்றதாயிருப்பதனால், அது மாற்றியமைக்கப்பட்டாலொழிய தாம் அதிற்சேரமுடியாதென்று சமஸ்தானாதிபதிகள் பிரிட்டிஷ் அரசினர்க்கு ஓர் வெடிகுண்டு போட்டதும் அதனால் இந்தியா மந்திரி சேர் சாமுவல் ஹோர் உட்பட பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் எல்லோரும் அவதியுற்றதும் யாம் அறிந்தனவே. இப்போது பிரிட்டிஷ் அரசினர்க்கும் சமஸ்தானாதிபதிகட்குமிடையே இது விஷயமாக ஓர் சமரசம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சமஸ்தானாதிபதிகள் கோரிய பிரகாரம் இந்தியா மந்திரி சில திருத்தங்களைத் தமது அரசியல் மசோதாவிற் செய்வார் என்றும் லண்டன் "டெயிலி டெலிகிறாப்" பத்திரிகை கூறுகிறது. ஆனால் இதைப்பற்றி உத்தியோக முறையில் எவ்விதமான அறிக்கையும் வெளியிடப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

### பண்டிதர் மாளவியா.

கோரக்பூர்காசித் தொகுதியின் பிரதிநிதியாக இந்தியச் சட்டசபையில் இருந்த முன்ஷி இஸ்வர சாரண் அவர்கள் ஸ்தானம் இழந்துவிட்டார். அவ்விடத்திற்காய் பண்டிதர் மதன் மோகன் மாளவியா அவர்கள் அபேட்சகராய் முன்னிற்க வேண்டும் எனக் காங்கிரஸ் வாதிகளும் தேசியக் காங்கிரஸ் வாதிகளும் கேட்டுக் கொண்டபடி அவர் முன்னிற்பர் என்று அறிபலானேம். அவர்க்கு எதிரிடையாய் ஒருவரும் முன்னிற்கார் என்று தெரிகிறது.

பின்வந்த செய்தி.

காசி - கோரக்பூர்த் தொகுதிக்குப் பண்டிதர் மதன் மோகன மாளவியா அபேட்சகராக நிற்கமாட்டார் என்றும் காங்கிரஸ் தேசியவாதிகளின் சார்பாகப் பண்டிதர் கிருஷ்ணகாந்த மாளவியாவே நிற்பார் என்றும் தெரிகிறது. காங்கிரஸ் சார்பாக ஸ்ரீமதி உமாநேரு என்னும் பெண்மணி அபேட்சகராகநிற்பர் பலத்த போட்டி நடைபெறும் என எதிர்பார்க்கப் படுகிறது.

### கல்கத்தா மேயர்ப்பதவி.

இந்தியச் சட்டசபையங்கத்தவராகிய மிஸ்ரர் A K. பஜ்லுல் ஹக் என்னும் முஸ்லிம் தேசாபிமானி சென்ற செவ்வாய்க் கிழமையன்று காங்கிரஸ் சார்பாக கல்கத்தா மேயராகத் தெரிவு செய்யப்பட்டார். தெரிவின்பின், தமது வெறுப்பைக் காட்டுதற்காக ஐரோப்பிய அங்கத்தவர்கள் யாவரும் நகரசபை மண்டபத்தைவிட்டு வெளியேறினர்.

### சதிவழக்கு

அரசபிரானுக்கு எதிராகச் சதிசெய்து பிரிட்டிஷார் பரிபாலனத்துக்குப் பங்கம் விளைக்க முயற்சித்தனர் என்று 35 புரட்சிக்கட்சியினர் சென்ற 30-4-35இல் கல்கத்தாவில் விசேஷ நீதிஸ்தலத்தில் குற்றம் சாட்டப்பட்டனர். பின்வருமாறு அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

6 பேர்க்குத் தீவாந்தர தண்டனை

3 பேருக்குத் தனித்தனி 10 வருடக்கடுங்காவல் மீதியானோர்க்குத் தனித்தனி 7 வருடச் சிறைத்தண்டனை.

### தேகவியோகம்.

ஸ்ரீ. A. K. பொன்னுத்துரை.

தொண்டைமானாறு பகுதியில் தபாற்கந்தோர் அதிபராயிருந்து இளைப்பாறித் தற்போது வட்டுக்கோட்டையில் வசிப்பவரான ஸ்ரீ A. கந்தையா அவர்களின் சிரேஷ்டபுத்திரன் ஸ்ரீ பொன்னுத்துரை சென்ற 12 4 35 பிற்பகல் 4 மணியளவில் தாய் தந்தையர் கதற, சுற்றமித்திரர் பிரலாபிக்க இம்மண்ணுலக வாழ்வை நீத்தனர் என்றறிந்து பெரிதும் மனங்கலங்கின்றோம். இவ்வாலிபர் கொழும்புச் சர்வகலாசாலையில் "இன்ரர் ஸயன்ஸ்" வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தவராவார். இவரின் அகால மரணம் மிகவும் பரிதபிக்கத் தக்கதாம். இவரைப் பிரிந்து துன்புறும் பெற்றோர் சுற்றமித்திராதியோருடன் யாமும் அநுதாபமுறுகின்றோம்.

[இவ் விஷயக்குறிப்பு தவறிக்கிடந்தமையினால் காலதாமதமாய் வெளிவந்தமையிட்டு மிகவும் வருந்துகின்றோம். ப. ர்.]

## புதினக் குறிப்புக்கள்.

### நெல்லின் மீது அதிகவரி

வலிகாமம் வாலிபர்மகாநாடு சென்ற சனிக்கிழமை அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார்கோவில் வீதியில் ஸ்ரீ S. சுவாமிநாதன், B. A. அவர்களின் தலைமையில் நிகழ்ந்தது. தலைவர் அவர்கள் டொனமூர்த்திட்டப் பகிஷ்கார விஷயத்தைப் பற்றி நன்குவிளக்கியபின், எமது 4 பிரதிநிதிகளையும் நாம் அனுப்பாவிட்டால், நெல்வரி உயர்த்தப்பட்டிருக்காது என்று கூறினார்.

இதன்பின் நெல்மீது அதிகவரிதீர்மானித்ததைக்கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேறியது.

### அரசினர் உதவிபெறும் வங்கி.

இலங்கையில் தாபிக்கப்படவிருக்கும் அரசினர் உதவி பெறும் வங்கிக்கு மூலதனம் 1 கோடி ரூபாவாகும். இதில் 80 லட்சம் ரூபாவை அரசினரே உதவுவர். மீதி 20 லட்சம் ரூபா பங்குகளாக ஊரவர்களுக்கு விற்கப்படும் 20 லட்சம் ரூபாவுக்குமேல் ஊரவர்கள் பங்குகளை எடுத்தால் அரசினர் அதற்குத் தக்கவாறு தாம் கொடுக்கும் தொகையைக் குறைப்பார்.

### தாயும் பிள்ளையும் தொங்குகின்றனர்.

இன்றுகாலை(வியாழன்) வண்ணார்பண்ணை நீராவியடிக் கடையிற் சாமி கோவிலுக்கணித்தாகவுள்ள ஓர் வீட்டில் 27 வயதுடைய வள்ளிப்பிள்ளை என்னும் பெண்ணின் பிரேதமும், மகள் (வயது 9) சிரணத்தங்கத்தின் பிரேதமும் தொங்கியபடி காணப்பட்டன.

மேற்படி வள்ளிப்பிள்ளையின் புருஷன் சின்னக்குட்டி யென்பவர் மலாய்நாட்டில் பகாங்கவேலைப்பகுதியில் மண்டூர் வேலை பார்ப்பவராம். நேற்றுச் சிங்கப்பூரிலிருந்து முத்திரை ஒட்டாமல் வள்ளிப்பிள்ளைக்கு ஓர் கடிதம் கிடைத்ததாம் தாயினதும் பிள்ளையினதும் மரணத்திற்கும் இக்கடிதத்திற்கும் சம்பந்தமுண்டு என்று சொல்லப்படுகிறது வள்ளிப்பிள்ளைக்கு இன்னும் 3 ஆண் பிள்ளைகள் உண்டு. தாயும் பிள்ளையும் எவ்வாறு இக்கதிக்குள்ளானார்கள் என்பது புலப்படவில்லை. பொலிசார் வந்து விசாரணை புரிகின்றனர்.

### பொன்னனின் பிரேதம் கொண்டுவரப்பட்டது.

நாயன்மார்கட்டைச் சேர்ந்த கந்தையா என்பவனைக் கத்தியாற் குத்திக்கொலை செய்தான் என்று யாழ்ப்பாணம் சுப்ரீம் கோட்டிற் குற்றம் சாட்டி மரண தண்டனை விதிக்கப்பட்ட பொன்னன் என்னும் பள்ளன் போகம்பரை மறியற் கூடத்தில் நேற்றுத் தூக்கிட்டுக் கொலைசெய்யப்பட்டான் அவனின் பிரேதம் இன்று காலை அவனது சுற்றத்தார்களால் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

### மரங்களுக்கு மயக்க மருந்து.

30 அடி உயரம்வரை வளர்ந்த மரங்களைத் தானும் பெயர்த்து வேறு இடங்களில் நாட்டலாம் என்று பிரிட்டிஷ் சிற்பிகள் சங்கத் தலைவரான மிஸ்ரர் G கிறவோர்ணம் என்பவர் கூறுகிறார். இம்மரங்களுக்கு "குளோரபாம்" என்னும் மயக்க மருந்தை உட்செலுத்த, அவற்றின் நரம்புகள் செயலற்றுக் கிடக்கும் நிலைமையில் எவ்வித ஆபத்துமின்றி அவற்றைப் பெயர்த்து நாட்டலாம் என்று மேற்படி நிபுணர் கூறுகின்றார்.

### சிங்களப் பிரதிநிதியும் தீவுப்பகுதிவாசிகளும்.

கண்டிப்பகுதியின் பிரதிநிதியாக அரசாங்கசபையில் உள்ள மிஸ்ரர் ஜோர்ஜ் E. D. சில்வா என்பவர் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று புங்குடுதீவுக்கு விஜயம் செய்தார். புங்குடுதீவுக் கிராமச் சங்கத் தலைவரான ஸ்ரீ. V. பசுபதிப் பிள்ளை மிஸ்ரர் சில்வாவை வரவேற்றுபசரிக்கையில் புங்குடுதீவுக்கும் வேலணைக்குமிடையில் ஓர் பாலமின்மையால் புங்குடுதீவுவாசிகள்படும்சொல்லொணாக்கஷ்டங்களை எடுத்துக்காட்டினர். மிஸ்ரர் சில்வா பதிலளிக்கையில், "அரசாங்கசபை உமது தேவைகளைப்பற்றிச் சிந்திக்க வேண்டுமானால், அரசாங்கசபையிலுள்ள சிங்களப் பிரதிநிதிகளுடன் உங்கள் பிரதிநிதிகளை ஒத்துழைக்கச் சொல்லுங்கள். பாலம் இடும் விஷயத்தில் யாதும் என்னாலான உதவியைச்செய்கின்றேன்" என்றார்.

கோடைகாலத்திற் பீடிக்கும்

தலைவலியைத் தடுப்பதற்காக

ஒரு போத்தல்

**லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்**

**தைலத்தை**

வாங்கி வைத்திருங்கள்

இந்தியாவில் சிறந்ததும் முதன்மையானதும்.

(Y 16. 1-4-34—31-12-35)

**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி.**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 129777 00.

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை.

பங்கொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவிற்குக்குறையாமல் இருக்குமானால் 3 விதம் வட்டியுடன் தினசரிப்பற்றுவரவு செய்யலாகும்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 3 விதம், 4 விதம், 6 விதம், 8 விதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும் தொண்டைமானாறு இராச்சியப்பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன இந்தியகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். மாசந்தோறும் கட்டுபவர்களுக்கு 10 விதமான வட்டியும், ஏனையோர்க்கு 12 விதமான வட்டியும் விதிக்கப்படும் (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாக் கொடுக்கலாம்.

காணி ஈடாக வைத்துக்கொண்டு பிணையுடன் கடனெடுக்கலாம். (இந்தக்கடனையும் பாகம் பாகமாகக் கட்டித் தீர்க்கலாகும்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

சி. செல்லப்பா.
மனேஜர்.

(Y. 152. 21-11-34—20 11 35) (ஐ.)

# இலங்கா ஆயுள்வேத வைத்தியசாலை.

## ஔஷத விபரம்.

### கிரந்தி எண்ணெய்.

இவ் எண்ணெய் குழந்தைகளுக்குச் சாரும் கிரந்திக்காய்ச்சல், கொதிக்காய்ச்சல், செங்கிரந்தி கருங்கிரந்தி, செவ்வாப்பு, செங்கரப்பன், அரிகிரந்தி, அக்கி, அசகுணி இவைகட்கு உள்ளுக்குக் கொடுத்து தலைக்கும் வைக்கக்கூடியது. இன்னும் வயதுமுதிர்ந்தவர்க்கு உண்டாகும் நோய்கட்கும் உபயோகப்படக்கூடியது. 3 அவுன்ஸ் சீசா ரூபா 1 00. 6 அவுன்ஸ் சீசா ரூபா 1 90. 12 அவுன்ஸ் சீசா ரூபா 3 75.

### மாந்தபேதி எண்ணெய்.

இவ் எண்ணெய் மந்தம், மாந்தம், மலபந்தம், வயிற்றுப்பிசம், வாயு, சிதக்கட்டு, வயிற்றுவலி, கிருமி ரோகங்கள், மாந்தசுரம், வயிறூதி அடிக்கடி மலமிறங்குதல் ஆகிய இவைகளை மாற்றக்கூடியது. வாலிபர் - வயோதிகர்களுக்கு ¼ முதல் ½ தேக்கரண்டி, பாலர்களுக்கு ½ முதல் 2 தேக்கரண்டி, வாலிபர் - வயோதிபர் 2 முதல் 4 தேக்கரண்டி, வெந்நீர், தேநீர், பால்கலந்து குடிக்கவும். சீசா விலை சதம் 75.

### சுந்தகமூலி ரசாயனம்.

ஆண், பெண், இருபாலார்க்கும் உபயோகமாகும்படி செய்த இந்த ரசாயனம்.

சோகை, பாண்டு, வீக்கம், காமாலை, இரேக பாரிப்பு, நீர்க்கோவை, பிறநீர்க்கோவை, பெருவயிறு, சீராமை, பேராமை, கவுசி, செண்டை முதலிய உதரரோகங்களையும்; சொறி, கரப்பன், கிரந்தி படர்தாமரை, அரிப்பு, தடிப்பு, கட்டிகள், கிரந்திநீர் சம்பந்தமான மற்றும் ரோகங்களையும்; மலபந்தம், சிறுநீர்க் குறைவு, கால் கை உளைவு, கடுப்பு அசதி, களதி, முதலாம் ரோகங்களையுந் தீர்க்கும்.

இன்னும் செற்பாசய கிரந்தி, சூதகவாய்வு, சூதககாலவயிற்றுவலி, குத்து, சூதகச்சிக்கல், சூதகக்கட்டி காலந் தவறிச் சூதகம் காணுதல், சூதகம் வராது தடைபடல், சூதகச் சிக்கலினால் தேகம் பாரித்தல், மலட்டுரோகம், அடிக்கடி செற்பமழிதல், செற்பத்தில் சிசுவை மரிக்கச் செய்தல், செற்பமுண்டாகாமை, செற்பாசயக்கிருமி, செற்பாசயத்தில் சதை வளர்தல், சவ்வுவளர்தல், பாசபற்றியிருத்தல், மதர்த் திருதலாகிய செற்பாசய ரோகங்கள் யாவையும் நீக்கிக் செற்பமுண்டாகச் செய்யும்.

12 அவுன்ஸ் விலை ரூபா 2—25,

### மிளகு சந்தனாதித் தைலம்.

தைலங்களுள் அதி குளிர்ச்சி நிறைந்ததும், குணத்தில் விசேஷித்ததுமான இத்தைலம் பித்ததேகிகளுக்கும், அதிசூடான தேகிகட்கும் மாத்திரமல்ல உட்காய்ச்சல், அஸ்தி சுரம், கணைக்காய்ச்சல், தலைக்கொதி கண்ணெரிவு, பித்தமயக்கம், தேகவெளுப்பு, சோகை முதலிய நோய்களையும் மாற்றும்

12 அவுன்ஸ் விலை ரூபா 2—25.

### பரிமள கூந்தல் தைலம்.

இது மயிர் அதிகமாக வளர்தற்கும் பெண்களுக்கு அழகு பயக்கும் சுருண்டு கூந்தல் செறிவதற்கும் இன்றியமையாதது. தலையிலும் கண்களிலும் வரக்கூடிய சொறிவு, எரிவுகளைப் போக்கவல்லது. மண்டைக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும், முகத்திற்கு அழகும் வசீகரணமும் அளிக்கும். போத்தில் விலை ரூ. —1.00.

### சஞ்சீவித் தைலம்.

வெளிப்பிரயோகமாகவே சன்னி, வலிப்பு, வாதம், சுவாசகாசம், இருமல், தலையிடி, வயிற்றுவலி, புதிய காயங்கள், நோவு, முறிவு, நெரிவு, வீக்கம், விரணம், மூலமுளை, படர்தாமரை மற்றும் சகலவித நோய்களையும் மாற்றும். விலை சதம்—50.

மகா கோரோசனை மாத்திரை விலை சதம் 75.

இராஜரிஷி சஞ்சீவி மாத்திரை விலை சதம் 60.

தலைமை வைத்தியசாலை,
மணிக்கூட்டுத்தெரு யாழ்ப்பாணம்.

கிளைவைத்தியசாலை,
101. பெரியதெரு யாழ்ப்பாணமும்,
மன்னார், நெல்லியடி.

(Y. 69. 18-6-34 to 17-6-35.)



காலத்துக்குத்தக்க மலிவுவிலை!

# மங்களூர் ஓட்டுக் கம்பேனி.

மிலிற்றறி, கவர்மெண்ட், முனிசிப்பல்
கொந்திருத்துக்காரர்.

மோர்க்கன் ஓடு, 1931 தொடக்கம் வருஷக் கொந்திருத்தாய் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கப்பெற்று வருகின்றது.

வேறு எந்த ஓட்டிலும் இல்லாத இரண்டு வரைகள் மோர்க்கன் ஓட்டில் இருக்கின்றன. இவை அடைமழைக்கும் ஓட்டைக் கசியவிடாது காத்துக்கொள்ளும்.

க சே. த. சே. செல்லையாபிள்ளை,
316ம் நி-ர் கிட்டங்கித்தெரு, யாழ்ப்பாணம்.

பல இடங்களுக்கும்போய், எங்கள் ஓடுகளை விற்க ஏஜெண்டுமாராய் சுன்னாகம் இ. தாமோதரம்பிள்ளையும் கச்சேரியடி கிழக்கு, கனகரத்தினம்ரோட்டு, பொ. தம்புவும் நியமிக்கப்பெற்றிருக்கின்றார்கள்.

(Y 41. 21-5-34 to 20-5-35.)


பிறர்க்கின்னா முற்பகல் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற்றானே வரும்.


## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமூஸ்லி, சப்பேமுத்ஸலி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிகை வகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவிருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்த காமாலை, பித்தபாண்டு. பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை றாத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரை றாத்தலுக்கு ரூபா பத்து கால் றாத்தலுக்கு ரூபா ரூ. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொலைவிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனால் முன் மணியோடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
செலான் ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு.

(Y. 17 1-11-34 to 31 12-35) சிலோன்



# திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒரு பங்கு 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைச்சணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 137. 1-11-34 to 31-10 35.) வி.


# தாயும் பிள்ளையும்.

ச. இராசரத்தினம் எழுதியது.

இலங்கை வைத்தியக் கல்லூரி மருத்துவ ஆசிரியரும், கொழும்பு பிரசவ வைத்தியசாலைப் பிரதம வைத்தியருமாகிய **Dr. S. L.** நவரத்தினம் அவர்கள் எழுதிய முகவுரையைக் கொண்டது. "வீரகேசரி", "சோதிடபரிபாலினி", "வர்த்தக ஊழியன்" முதலிய பிரபல பத்திரிகைகளின் மதிப்புரைகளைப் பெற்றது.

1. "………பெண்மக்கள் கர்ப்பமாயிருக்குங் காலத்திலும், பிரசவ காலத்திலும், பின்னரும் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும், இன்னோரன்ன அரிய விஷயங்களையும் நுட்பமாகஎடுத்து விளக்குவது: தமிழில் முதன்முதல் இவ்விஷயமாக வெளிவந்தநூல் இதுவே யாகும்." இந்துசாதனம்.

2: "………ஒவ்வொரு குடும்பத்திலும் கைவசமிருக்கவேண்டியது அவசியமாகும்" சுதேசாரி. விலைசதம் 50.

கிடைக்குமிடங்களுட் சில.

(1) சைவப்பிரகாச யந்திரசாலை, யாழ்ப்பாணம்.
(2) சண்முகநாதன் புத்தகசாலை, ,, ,,
(3) **Leela Stores 249, Norris Road, Colombo.**
(4) **Naveena Katha Book Depot, Montgomery Street, Rangoon.**
(5) **Messrs. Seenicutty and Co Treacher Street, Ipoh.**

(Mis 212. 21-3 to 20-5-35.) (சி.)


# பவுண்மார்க் ஓடுகள்.

| | |
|---|---|
| மலிவு நிறைந்த | பொலிவு நிறைந்த |
| அழகு மிக்க | புகழ்வு மிக்க |
| ஓசை கொண்ட | உயர்வு கண்ட |
| கனங் குறைந்த | சாய்வு தந்த |
| கசிவில்லாத | சூடு கொள்ளாத |
| பவுண்மார்க் | ஓடுகள் இவைகளே. |

இவை எம்மிடமன்றி வேறெவரிடத்தும் கிடைக்காதன வென்பதை மறவாதீர்.

தனிஏசண்டு: சி. வீரகத்திப்பிள்ளை அண்டு சன்ஸ்
யாழ்ப்பாணம், பருத்தித்துறை,
வல்வெட்டித்துறை, காங்கேயன்துறை.

சப் ஏசண்டுகள்: சி. க. ஆறுமுகம்பிள்ளை, காரைநகர்.
பி. ம. தம்பிஐயா, ஊர்காவற்றுறை.

N. B. மேற்குறித்த இடங்களில் மேற்குறித்த ஆட்களிடமே பெறலாம்,
மற்றெவரிடத்தும் இந்த ஓடுகள் இல்லை.

**Phone No 93.**

(Y. 27. 1-5-34 to 30-4-35)


வான்முகில்வழாதுபெய்க மலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க,
நான்மறையறங்களோங்க நற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதி விளங்குகவுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on the behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna at their Press, Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on THURSDAY the 2ND MAY 1935.